Registered as a Newspaper பக்கங்கள் : 8

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

விலை: ரூபா 6-00

DMC

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

## யாழ். செயலகத்திற்கு உள்ளக, வெளியக தொடர்புசாதன வசதி

யாழ் செயலகத்தின் தேவைக்கென உள்ளக மற்றும் வெளியிட வானொலி தொடர்பு சாதனங்களை அனுப்பி வைப்பதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு அனுமதி வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. உள்ளக சாதனத்தினால் செயலகத்தின் உள்ளே தொடர்பை நேரடியாக ஏற்படுத்தவும் வானொலி தொலைத்தொடர்பு சாதனம் மூலம் கொழும்பிற்கான தொடர்பை நேரடியாக ஏற்படுத்திக் கொள்ளவும் உதவும் எனத் தெரிவிக்கப்பட்டது தற்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வானொலி தொடர்பு சாதனத்தின் ஊடாகவே யாழ் செயலகத்திற்கும் கொழும்பிற்குமான தொலைத்தொடர்பு செய்து கொள்ளப்படுகின்றது. இவற்றை விரைவில் அமைத்துக்கொள்வது சம்பந்தமாக யாழ் அரச அதிபர் தொலைத்தொடர்பு திணைக்களத்துடன் தொடர்பு கொண்டுள்ளார் இதேவேளை, யாழ் செயலகத்தின் அனைத்துப் பகுதி களுக்குமான தேவைக்கென மின்பிறப்பாக்கி ஒன்றை எடுத்துவரவும் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழு அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (தி)

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | மார்கழி 15 | 30 - 12 - 94 | வெள்ளிக்கிழமை | ஓசை 315

# புலிகள்-அரசு சமாதானப் பேச்சுக்கள் அடுத்த வாரத்தில் நடைபெறலாம்!

## தமிழ் மக்களின் அன்றாட பிரச்சினைகள் குறித்துப் பேச அரசு இணக்கம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் அடுத்தவாரம் நடைபெறலாம் என நமபகரமாகத் தெரிய வருகின்றது. இப்பேச்சுவார்த்தையில், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அன்றாட, அத்தியாவசியப் பிரச்சினைகள் தொடர்பாகப் பேசுவதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அறியமுடிகின்றது.

கடந்த வாரம் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெறவிருந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டமை தெரிந்ததே. அரசாங்கம் தமிழ் மக்களின் அன்றாட, அத்தியாவசியப் பிரச்சினைகள் குறித்து பேசுவதைத் தவிர்க்க முற்பட்டமையே இப் பேச்சுவார்த்தைகள் பிற்போடப்பட்டமைக்குக் காரணமாக இருந்தது.

இதைத் தொடர்ந்து, தலைவர் பிரபாகரன் சந்திரிகா அரசாங்கத்திற்கு எழுதிய கடிதத்தில், அன்றாட, அத்தியாவசியப் பிரச்சினைகள் பேச்சுவார்த்தையில் முதலிடம் பெறவேண்டும் எனவும், பேச்சுவார்த்தைகள் கட்டம் கட்டமாகத் தொடர வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தார்.

தற்பொழுதுகிடைக்கும் நம்பகரமான தகவலின்படி அரசாங்கம் தலைவர் பிரபாகரன் வலியுறுத்தியதை ஏற்றுக் கொண்டு அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பாக பேசுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் அடுத்தவாரத்தின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறலாம் எனத் தெரியவருகின்றது.

இதே சமயம் இப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளவுள்ள அரசாங்கத் தரப்புப் பிரதிநிதிகள் குழு பற்றித்

(8ஆம் பக்கம் பார்க்க)

### படகு சேவை

## தமிழர் நிலங்களில் சிங்களவர் திருமலையில் அத்துமீறி குடியேற்றம்

(திருகோணமலை)

திருகோணமலையில் தமிழர்கள் குடி பெயர்ந்துள்ள இடங்களில் சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். ... மரண சான்றிதழைப் பெறக் கூட சிறிலங்கா பொலிசாரின் ...

## துப்பாக்கி சூடு மீனவர் காயம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை கடற்பரப்பில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி காரைநகரில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்திற்கு இலக்காகி மீனவர் ஒருவர் படுகாயமடைந்தார் படகும் சேதமடைந்தது.

மேற்படி சம்பவம் நேற்று அதிகாலை மூன்று மணியள

(8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்ட உணவுத் தேவையை சீராக்குவதற்குப் புதிய திட்டம்

### அடுத்த ஆண்டில் இருந்து அமுலாகும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தின் உணவுக் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் அரசாங்கம் அடுத்த ஆண்டுக்கான புதிய திட்டம் ஒன்றை வகுத்துளது.

இத்திட்டத்தின்படி இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கும் இடம் பெயராமல் உள்ள குடும்பங்களுக்குமான உணவுத் தேவையை சீராகப் பூர்த்தி செய்யும் நோக்குடன் கப்பல் கட்டணம் இல்லாமல் யாழ்ப்பாணத்திற்கு உணவுப்பொருள்களை அனுப்பி வைப்பதற்கு அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.

யாழ் அரசாங்க அதிபர் கொழும்பில் அரசாங்கத்தின் முக்கிய உயர் அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இரண்டு இலட்சத்து நாற்பத்திஇரண்டாயிரம் குடும்பங்கள் யாழ் மாவட்டத்தில்உள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஜனவரியில் இருந்து புதிய கப்பல் சேவை

(யாழ்ப்பாணம்)

கப்பல் கட்டணத்துடன் கூடிய கப்பல் ஒன்றையும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு அரசாங்கம் அனுமதி அளித்துளது.

அடுத்த மாதத்திலிருந்து இது நடைமுறைக்குவரும் என அரசாங்க அதிபர் திரு. பொன்னம்பலம் தெரிவித்தார்.

இக் கப்பலில் வர்த்தக ரீதியிலான பொருள்கள் எடுத்துவரப்படுவதற்கு அனுமதிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரச திணைக்களங்களுக்குரிய பொருள்கள் யாவும் இக் கப்பலிலேயே ஏற்றிவரப்படும் மற்றும் கூட்டுறவுச் சங்கங்

## பரு. துறைமுகத்துக்கு இரு இழுவைப்படகுகள்

(யாழ்ப்பாணம)

பருத்தித்துறை இறங்கு ... உள்ள ஐந்து இழுவைப் படகுகளில் இரண்டு மட்டுமே

(திருகோணமலை)

திருகோணமலையில் தமிழர்கள் குடிபெயர்ந்துள்ள இடங்களில் சிங்கள மக்கள் அத்துமீறி குடியமர்த்தப்பட்டு வருவதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

அது மேலும் தெரிவிக்கையில்: மடத்தடி, பிள்ளையார் கோவிலடி, உப்புவெளி பகுதிகளில் தமிழர்கள் முன்பிருந்த இடங்களில் சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

தமிழர்கள் தமது சொந்த இடங்களில் குடியேறாது தடுக்கப்பட்டு வருகிறார்கள்,

கந்தளாய் அஞ்சல் அலுவலகத்திற்கென ஒதுக்கப்பட்ட காணியிலும் சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்,

தங்களது உறவினர்களின் மரண சான்றிதழைப் பெறக்கூட சிறிலங்கா பொலிசாரின் நடவடிக்கையால் முடியாதுள்ளது

இதனால் தமிழ் மக்கள் மத்தியில் வெறுப்புணர்வு மேலோங்கி வருவதாகவும், இவ்வாறான இனவாத நடவடிக்கைகள் இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும் எனவும் பி. பி. ஸி தெரிவித்தது,

(8ஆம் பக்கம் பார்க்க)

## படகு சேவை இன்று இல்லை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று நடைபெறமாட்டாது என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

(யாழ்ப்பாணம)

பருத்தித்துறை இறங்குதுறையில் கப்பலில் ஏற்றிவரும் பொருட்களை கரைசேர்க்கும் உபயோகத்திற்காக புதிதாக இரண்டு இழுவைப் படகுகளை வழங்கும் சூழ்நிலை அரச தரப்பில் ஏற்பட்டிருப்பதாக யாழ் அரச அதிபர் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து திரும்பிய அரச அதிபர் நேற்று இதனைத் தெரிவித்தார்.

கப்பலில் ஏற்றிவரப்படும் பொருள்களை கரைசேர்ப்பதற்கான இழுவைப்படகுகள் போதாமல் உள்ள நிலை நீண்ட காலமாகத் தொடர்கிறது.

உள்ள ஐந்து இழுவைப் படகுகளில் இரண்டு மட்டுமே உபயோகப்படுத்தப்படுகின்றன. மிகுதி மூன்றும் பழுத

(8ஆம் பக்கம் பார்க்க)

கப்பலிலேயே ஏற்றிவரப்படும் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் தனியார் வர்த்தக நிலையங்கள், அரச சார்பற்ற நிறு

(8ஆம் பக்கம் பார்க்க)

# தப்பராவெளி ராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நேற்று தாக்குதல்

## மூன்று மணிநேரம் கடும் சண்டை

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டம் தப்பராவெளி என்னும் இடத்தில் நேற்று அதிகாலை இராணுவ முகாம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய பாரிய தாக்குதலில் ஏழு இராணுவத்தினர்காயமடைந்ததாக சிறிலங்கா படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சுமார் மூன்று மணி நேரம் இம் முகாமின் மீது மோட்டார்களினாலும் தானியங்கி இயந்திரத்துப்பாக்கிகளாலும் தாக்கியதாகவும் மேலும் சிறிலங்கா பாதுகாப்புவட்டாரங்கள் தெரிவித்தன.

இத் தாக்குதலின் போது இவ் இராணுவ முகாம் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்ததாகவும் பின்னர் அவர்கள் அதனைக் கைவிட்டுச் சென்றதாகவும் பி பி ஸியின் சிங்கள சேவை தெரிவித்தது.

நூற்றுக்கு மேற்பட்ட புலிகள் இத் தாக்குதலை நடத்தியதாக இராணுவ பிரிகேடியர் நிஹால் ஜெயக்கொடி கொழும்பில் தெரிவித்தார்

இத் தாக்குதலின்போது 11 விடுதலைப் புலிகள் கொல்லப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரி எதிர்நோக்கும் பாரிய மின்சார நெருக்கடி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்தியசாலையில் மீண்டும் பாரிய மின்சார நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாக யாழ். போதனாவைத்தியசாலைவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மின்சாரத்தை உற்பத்தி செய்யும் பல மின் பிறப்பாக்கிகள் பழுதடைந்து இருப்பதாகவும் தற்போது இயங்கும் 200 கே. வி. மின்பிறப்பாக்கியும் பழுதடையும் நிலையில் இருப்பதாகவும் இதனால் அத்தியாவசிய சேவைகள் ஸ்தம்பிதம் அடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பழுதடைந்துள்ள நிலையிலுள்ள நான்கு மின் பிறப்பாக்கிகளை திருத்த நடவடிக்கை எடுப்பதன் மூலமே மின் விநியோகத்தைச் சீர்செய்ய முடியும் என அவ்வட்டாரங்கள் மேலும் கூறுகின்றனர்: (நி, இ, பா)

## 85 கே. வி. மின்பிறப்பாக்கி யாழ்.ஆஸ்பத்திரிக்கு தேவை

(யாழ்ப்பாணம்)

மேலதிகமாக ஆகக் குறைந்தது 85 கே வி உடைய மின் பிறப்பாக்கி கிடைக்கப்பெற்றால் மட்டுமே யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது ஏற்பட்டுள்ளதைப் போன்ற மின்சாரப் பிரச்சினையை தவிர்த்துக்கொள்ள

(8ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை நிலைய மாற்றம்

நாளை நடைபெறவுள்ள பயிலுநர் ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கு யா/நல்லூர் தெற்கு விக்னேஸ்வர வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த பரீட்சை நிலையம் 70/20, அரசடி றோட்டில் அமைந்திருக்கும் யா/வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி ம. ம. வித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என வலயம்-1 இன் கல்விப் பணிப்பாளர் அறிவிக்கின்றார்.

## மீனவர் நிவாரணம்; கொள்கையளவில் ஏற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மீனவர்களுக்கான நிவாரணத்தை மாதம்தோறும் வழங்குவதற்கு புதிய அரசாங்கம் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

முன்னைய அரசினால் இந்த நிவாரணம் இந்த வருட முற்பகுதியில் திடீரென நிறுத்தப்பட்டது தெரிந்ததே.

கடல் வலயத் தடைச்சட்டம் மன்னாரிலிருந்து திருகோணமலைவரை நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுவந்த நிவாரணம் முன்னைய யு. என். பி. அரசினால் நிறுத்தப்பட்டது. புதிய அரசு பதவிக்கு வந்ததையடுத்து வழங்கப்படாமலிருந்த 'மார்ச்' மாதத்திற்கான நிவாரணம் யாழ். மாவட்டத்திற்கு வழங்கப்பட்டது.

மார்ச் மாதத்திற்கு பின்னரான மாதங்களுக்குரிய நிவாரணம் வழங்கப்படாமலிருந்தது. தற்போது இந்த நிவா

(8ஆம் பக்கம் பார்க்க)

## கூ. மொ. வி. ஸ்தாபனத்தை இயங்கவைக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தை புதிதாய் இயங்க வைப்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இதனுடன் உணவுக் கட்டுப்பாட்டு திணைக்களத்தை இயங்க வைப்பது குறித்தும் ஆராயப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர், புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஆகியோர் இது குறித்து கடந்த வாரம் தீவிரமாக ஆராய்ந்துள்ளனர். (தி)

## ஆசிரியர்களுக்கான புதிய சம்பளத்திட்டம் ஜனவரி - 1 முதல் அமுலுக்குவரும்

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கான புதிய சம்பளத் திட்டம் ஜனவரி முதலாம் திகதி முதல் அமுல் செய்யப்படும் என கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான உறுதி தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சேவை யாப்பு தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும்-அது விரைவில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் எனவும அவர் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் சேவை தொடர்பாக தீயசக்திகள் பரப்பிவரும் வதந்திகளை நம்பவேண்டாம் எனவும் அமைச்சர் ஆசிரியர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

க. பொ. த. (உ/த) பரீட்சை

## தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பெறுபேறுகள் வந்தன

(வடமராட்சி)

தனியார் பரீட்சார்த்திகளின் க பொ. த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் தபால்மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற யாழ். மாவட்ட தனியார் பரீட்சார்த்திகளின்

(8ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாதம் நூலகம் (stamp)

## வரிவிளம்பரம்

### ஒப்படைக்கவும்

25-12-94 அதிகாலை கிளாலியில் உடைகளும் புகைப்பட அல்பமும், அடங்கிய பயணப்பொதி கைமாறிவிட்டது. தவறுதலாக எடுத்தவர்கள் யாழ். பஸ்நிலைய கிளாலிச்சேவை அலுவலகத்தில் ஒப்படைக்கவும்,(10511)

### ஓடர் செய்து வாங்க

சிறுவர் பெரியோர்க்கான றெடிமேட்ஆடைகள் மற்றும் சாறி, பிளவுஸ் ஆண்களுக்கான ரவுஸர், சேட் பெண்களுக்கான பாட்டி பிறக் ஆகியவற்றை குறித்த தவணையில் தைத்துப் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு சலுகை விலைகள். தொடர்பு;- சிற்றி காமன்ஸ் பலாலி வீதி திருநெல்வேலி, கிளை: 'சிவபதி' இணுவில் (சி-11029]

### விற்பனைக்குண்டு

சோக்கேஸ், சிங்கர்தையல் மெசின், சாய்மனைகதிரை, மேசை, லவ்பேட்ஸ் கூட்டுடன் விற்பனைக்குண்டு. 25, கைலாச பிள்ளையார்கோவில் பின் வீதி, நல்லூர். (10537)

### விற்பனைக்கு

நல்லின இஸ்ரேல் ப்ளூ Israel Blue) முந்திரிகைக்கன்று விற்பனைக் உண்டு. உடன் பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மேஜர் பிரதாப் செட்டிப் பண்ணை, இராஜ வீதி, கோப்பாய். (சி-11047)

### இரும்புத்தகடு விற்பனைக்கு

நெல்குற்றும் ஆலைகள் மற்றும் தொழில் துறையில் பயன்படுத்தக்கூடிய - - 8 அடி × 4 அடி X ¼ அங்குலம் கனமுள்ள இரும்புத்தகடு விற்பனைக்குண்டு. ''மில்க்வைற்'' (சி-11036)

### வீடு விற்பனைக்கு

யாழ்- பல்கலைக்கழகத்துக்கு முன்பாக 214/5 இராமநாதன் வீதியில் 2 பரப்புக் காணியில் வீடு விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். இடைத்தரகர்கள் தேவையில்லை. (10533)

### பணிவன்பான வேண்டுகோள்

24-12-94 இரவு கிளாலி நல்லூரில் இருந்து வரும் பொழுது எனது நகைகளும் பணமும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதத்தில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம்வழங்கப்படும். (10538)

### 1995 - புத்தாண்டுப் பலாபலன்கள்

3-1-95 முதல் செவ்வாய் வக்கிரமும், புதுவருடபலாபலன்களும் ரூ 10/- விற்பனையாகின்றன. (நூலாசிரியர் - ''சத்யா'') பாடசாலை உபகரணங்கள் அப்பியாசக் கொப்பிகள் சஞ்சிகைகளுக்கு ஆனந்த்ஸ் புத்தகநிலையம் 21/B மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம். (10530)

### தவறிவிட்டது

23-12-94 8.30 மணியளவில் நல்லூரில் (கிளாலி) ரக்ரரில் பிரயாணம் செய்யும் பொழுது தவறவிடப்பட்ட அடையாள அட்டை இல:- 685062216V - ம் பெறுமதிவாய்ந்த பொருட்களும் கண்டெடுத்தவர்கள் திரும்ப ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு சோபிதா பல்பொருள் நிலையம் 395, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (10517]

### தவறிவிட்டது

29-12-94 அன்று யாழ்ப்பாணத்திலிருந்து சுன்னாகம் செல்லும் வழியில் க. சற்குணநாதன் ஆகிய எனது ரூபா 22,000/- பணம் அடங்கிய பிறவுண் கலர் பேஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில்ஒப்படைக்கவும். (10543)

### மாற்றப்பட்டுவிட்டது

29-12-94 அதிகாலை கிளாலியில் பிறவுண் நிறப் பிரயாணப்பை (Suitcase) ஒன்றுமாறிவிட்டது தயவு செய்து மாறி எடுத்தவர்கள் தங்களுடைய பிரயாணப் பையை மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன். தொடர்பு:- சண்முகநாதன் லீலாவதி, ஏழாலை மத்தி, ஏழாலை. (10534)

### அதிபர் வெற்றிடங்கள்

தென்மராட்சி கல்விக் கோட்டத்திற்குட்பட்ட இரு பாடசாலைகளுக்கு அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

மேற்படி கோட்டத்தில் யா/வரணி இடைக் குறிச்சி பாடசாலையும் யா/எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலையிலுமே வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இவ்வெற்றிடங்களுக்கு இலங்கை அதிபர் சேவையில் உள்ளோரிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. விரும்புவோர் எதிர்வரும் 06-01-95 ற்கு முன்னர் கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு விண்ணப்பத்தினை சேர்க்குமாறு தென்மராட்சி கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கம் தெரிவித்துள்ளார். (86)

## இலவச பாடப்புத்தகங்கள் அச்சிடும் வேலை பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டு நாட்டின் சகலபாடசாலைகளுக்கும்விநியோகிப்பதற்குத் தேவையான பாடநூல்கள் அனைத்தும் அச்சிட்டு முடிவடைந்துள்ளதாக கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

1995 ஆம் ஆண்டிற்கான இலவசப் பாடநூல்களை நாட்டிலுள்ள சகல கல்வித் திணைக்களங்களும் எதிர்வரும் ஜனவரி 10 ஆம் திகதியில் இருந்துகல்வியமைச்சுடன் தொடர்புகொண்டு பெற்று பாடசாலைகளுக்கு விநியோகிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. (பா,நி)

### ஒளி விழா

யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக்கழகத்தின் ''ஒளி விழா'' - 1994 இன்று பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழா யாழ். அரச அதிபர் திரு. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

### இன்றுமுதல் தபால் விநியோகம்

(வடமராட்சி)

யாழ். தபால் திணைக்களத்திற்கு 'மாகோ' கப்பலில் 397 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டு நேற்றுமாலை 4.00 மணியளவில் இறக்கப்பட்டு பின்னர் யாழ். பிரதான தபாலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

வெளிநாட்டுத் தபால்கள், பதிவுத் தபால்கள் என்பனவும் வந்துள்ளதாகவும் தபால்கள்இன்று முதல் விநியோகம் செய்யப்படுமெனவும் யாழ். பிரதான தபாலதிபர் திரு. ச. கோடீஸ்வரன் தெரிவித்தார். (யோ)

### தினகரன் கந்தசாமி காலமானார்

தமிழ்நாட்டின் தினகரன் பத்திரிகை நிறுவனரும் - மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக முக்கிய பிரமுகருமான கே. பி. கந்தசாமி காலமாகிவிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தி. மு. கவில் அமைச்சராக இருந்த கே. பி. கந்தசாமி - 1993 இல் தி. மு. க. பிளவுபட்ட போது ம.தி மு. கவில் சேர்ந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## நினைவு கூருகின்றோம்...

### 30.12.1994

1984- ம் ஆண்டு இதேதினத்தில் அம்பாறை - கல்முனைப் பகுதியில் சுவரொட்டி ஒட்டும்போது சிறிலங்கா காவற்துறையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**மாறன்** (நாகராசா திருமாறன் - கல்முனை - 02- அம்பாறை)

1987- ம் ஆண்டு பெரியவிளான் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய,

**ராமு** ( - - - )

காத்தான்குடிப் பகுதியில் ஜிகாத்குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**நசீர்** (முகமட் நசீர் ' - காங்கேயன் ஓடை - மட்டு)

1989- ம் ஆண்டு தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**விஜயரத்தினம் தேவகுமார்** (அறிவொளி அரசடி வீதி- யாழ்ப்பாணம்)

1990- ம் ஆண்டு குப்பிளானில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சாஜி** (சாந்தி அன்னம்மா சின்னையா - ஆனந்தம் பண்ணை, உருத்திரபுரம் கிழக்கு - கிளி)

1991- ம் ஆண்டு மட்டுநகரில் வீரச்சாவெய்திய,

**கென்றி** ( - - - )

இதே தினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்கா படையினராலும் இந்திய படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

[சி-11046]


## தமிழ்த்தாய் நாட்காட்டி

அழகுக்கு அழகு அறிவுக்கு..... அறிவு

கொடுக்கும் பணத்துக்கு மேலான பெறுமதி

இன்று எங்கும் பேசப்படுவது தமிழ்த்தாய் நாட்காட்டியே

எல்லோரும் தேடி வாங்குவது தமிழ்த்தாய் நாட்காட்டியே

★

பரீட்சைத்துப் படிக்கச் சொல்ல நீங்கள் நாட்காட்டியோடு விளையாடிக் கொண்டிருக்கின்




உ

சிவமயம்

நேற்றுவரை இந்தத் தாயின் கவலை நியாயமானதே தமிழ்த்தாய் நாட்காட்டி வாங்கிய பின்னர் பிள்ளைகள் கூறுவதே நியாயமாகும்.




பள்ளி செல்லும் பிள்ளைகளின் கல்விக்கு
தமிழ்த்தாய் நாட்காட்டி அறிவூட்டும்.
நல்ல நாள் பார்க்கும் பெரியவர்களுக்கு
தமிழ்த்தாய் நாட்காட்டி வழிகாட்டும்.

**உண்மை... வெறும் புகழ்ச்சியில்லை**
**வாங்கிப் பாருங்கள் வரலாறு உங்கள் கையில்**

தமிழ்த்தாய் நாட்காட்டி:- விலை 100/. ரூபா

இது தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவின் வெளியீடு

(ஜ-11049)

உ
சிவமயம்

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



பிறப்பு:-
1945.10.31

இறப்பு:-
1994.11.30

அமரர்
**சின்னத்தம்பி சடாட்சரசண்முகதாஸ்**
[B.A. (Cey) S.L.A.S]
(பேரவைச் செயலாளர், மேலதிக செயலாளர் கல்வி அமைச்சு, வடக்கு-கிழக்கு மாகாண சபை, திருகோணமலை)

புங்குடுதீவு 3-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் சின்னத்தம்பி சடாட்சரசண்முகதாஸ் அவர்களின் அந்தியேட்டிக் கிரிகைகள் 28.12.94 அன்று முகத்துவாரத்திலும் வீட்டுக் கிருத்தியக் கிரிகைகள் 30.12.94 இன்று இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மற்றும் அன்னாரின் இறுதிக் கிரிகைகளில் நேரடியாகப் பங்கு பற்றியோருக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும், கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்டோருக்கும் பத்திரிகைகளுக்கும், இரங்கல் கூட்டங்களை நிகழ்த்தியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

தனிப்பட்ட முறையில் அழைப்புக்களை வழங்க முடியாமைக்கும், தனிப்பட்ட முறையில் நன்றி கூற முடியாமைக்கும் வருந்துகின்றோம்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மனைவி, மக்கள், உறவினர்கள்.**


30, எட்வட்லேன்,
கொழும்பு - 3

(10535)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் ... நூலகம்.

# புறநானூற்றுக் காலத்தின் பின் தமிழரிடையே தோன்றிய வீரன்





'இந்தியாவில் பிரிவினைக்கு எதிராகச் சட்டம் இருக்கின்றது. எம்மால் (தமிழகத்தவரால்) தனிநாடு ஒன்றுக்காகப் போராட்டம் நடத்த முடியாத நிலையில் நாம் இருக்கின்றோம். ஈழத்தில் நடைபெறும் போராட்டத்தினூடாகத் தமிழனுக்கென்று ஒரு நாடு கிடைக்கும் என்ற மகிழ்ச்சியில் நாம் எல்லோரும் இருக்கின்றோம்.

நான் இங்கே துணிந்து ஒரு கருத்தை அழுத்திக் கூற விரும்புகிறேன்.

புறநானூற்றுக் காலத்துக்குப் பின்னர், அதாவது இரண்டாயிரம் ஆண்டு காலமாகப் பிரபாகரன் போன்று வீரனொருவன்எம்மிடையே தோன்றவில்லை.

தம்பி பிரபாகரன் ஒரு நேரிய (நியாயமான) போராட்டத்தை நடத்துகின்றான். என்றுமே நேரிய(நியாயமான) போராட்டத்தை நடத்தும் வீரர்கள் தோல்வியை எதிர்கொள்வதில்லை. ஒரு வீரன் நேரிய (நியாயமான) போராட்டத்தை மேற்கொள்ளும் போது கட்டாயமாகஅவன் காலடியில் வெற்றி தானாகவே வந்து விழும். இதுவே நல்லறிஞர்களின் வாழ்த்துக்களாகும். பிரபாகரனுக்கு வெற்றி கிட்டும் என்பதில் எவ்வகை ஐயமும் இல்லை. அந்த வெற்றிக்காக நீங்களும் உங்களால் முடிந்ததைச் செய்ய வேண்டும்.

தம்பி பிரபாகரன் இன்று தனித்து நின்று இரண்டு அரசுகளுக்கு எதிராக அந்த நாடுகளின் கடல், தரை, வான் படைகளுக்கு எதிராகப் போராடுகின்றான். அவனுக்கு போதிய படைக்கருவிகள் இல்லை;காசில்லை; படையில்லை; வீடில்லை; உடையில்லை. எந்த வாய்ப்பும் இன்றிக் காடுகளிலும் மேடுகளிலும் மறைந்து நின்று போராடுகின்றார்கள் அந்த இளம் வீரர்கள்.

பிரபாகரன் செய்வது நல்லதா? கெட்டதா? என்று எண்ணுகின்றவர்கள் கூட அவன் வெற்றி பெறுவானா? இல்லையா? என்று எண்ணுகின்றவர்கள் கூட அவன் ஒரு மாவீரன் என்பதில் ஐயப்பாடு கொள்வதில்லை. அவனது போராட்டத்தைக் கண்டு உலகமே இன்று வியந்து நிற்கின்றது.

தன் நாட்டுக் குடிமக்கள் மீது குண்டு போடும் ஒரே ஒரு நாடு இலங்கை. தம் உயிர்களின் காப்புக்கருதி பல இன்னல்களுக்கு இடையில் தமிழகத்துக்கு வரும் ஈழத்து தமிழ் ஏதிலிகளை இந்தியக் கடற்படையும் கரையோர காப்புப்படையும் சுட்டுக் கொலை செய்கின்றது. ஆக இலங்கையில் ஈழத் தமிழனுக்கு காப்பாக வாழும் உரிமை இல்லை. வந்த இடத்திலும் தமிழகத்தில் வாழ வழியில்லை. உண்மையிலேயே தமிழகத்திலும் ஈழத் தமிழர்கள் துன்பத்துக்கு இடையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இது துயரத்துக்குரிய நிலை.

மனிதனாகப் பிறந்தவன் ஒவ்வொருவனுக்கும் இந்த உலகில் சுதந்திரமாக வாழ உரிமை உண்டு என்பதை நிலை நிறுத்த வேண்டும் என இந்த மாநாட்டினூடாக இந்தியப் பேரரசையும் மற்றும் உலக நாடுகளின் அரசுகளையும் கேட்டுக் கொள்கின்றேன். நமது மக்கள் நம் கண் முன்னே இறந்து கொண்டிருப்பதை நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதில் பொருளில்லை.

(சேர்மனின் தலைநகர் பேர்லினில் 12-15 ஆகத்து 1993இல் நடைபெற்ற பன்னாட்டுத் தமிழுறவு மாநாட்டில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ விசுவநாதம் அவர்கள் ஆற்றிய முதலுரையில் ஒரு பகுதி)

# சர்ச்சையாகி விட்ட பாப்பரசரின் நூலும்பௌத்தமத சிந்தனை வாதமும்

வரலாற்றில் இருந்து வந்த எந்தப் பாப்பரசர்களும் தமது திருப்பணிக்காலத்தில் தம் சொந்தக்கருத்துக்களை நூலாக வெளியிடவில்லை என்ற எண்ணத்தை நற்போதைய 264 வது பாப்பரசர் இரண்டாம் அருள் சின்னப்பரின் நூலான''CROSSING THE THRESHOLD OF H(PE''மாற்றியமைத்துள்ள நிலையை உலகுக்கு வெளிக் காட்டிவிட்டது. ஒக்டோபர் மாதம் 20-ம் திகதி வெளியிடப்பட்ட இந்நூலின் மூலம் மிகச்சிறந்த விற்பனையை ஏற்படுத்தி நூலாசிரியர்களில் ஒருவராகவும் பாப்பரசர் உலகில் இனங்காணப்பட்டு விட்டார். ஆட்சியில் இருக்கும் பாப்பு ஒருவரால் பொது விற்பனைக்கென முகவர் நிறுவனம் ஒன்றினால் விடப்பட்ட முதல் நூலும் இதுவே உலகளாவிய ரீதியில் முதற் பதிப்பாக 20 MILLION பிரதிகள், 21 மொழிகளிலும் 35 நாடுகளில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன. பிரித்தானியா, அயர்லாந்து ஆகிய நாடுகளில் மட்டும் 2,50,000 பிரதிகள் விற்பனை நிலையங்களுக்கு விற்கப்பட்டுள்ளன. இவற்றால் கிடைக்கப்பெறும் அதி வருமானம் தர்ம ஸ்தாபனம் ஒன்றுக்கு வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எழுபத்திநான்கு வயதடைந்திருக்கும் கத்தோலிக்க திருச்சபையின் ஆன்மீகத் தலைவரான இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் தனிப்பட்ட எண்ணங்களையும், ஆன்மீகக் கருத்துக்களையும் தாங்கிய இந்நூல் சுமார் 230 டக்கங்களைக் கொண்டது. இத்தாலிய பத்திரிகையாளரான விற்றோறியோமெசோறி (Vit to -rio Messori) என்பவரினால் எழுத்தில் கொடுக்கப்பட்ட 35 வினாக்களுக்கு மிக நீண்ட பதில்களாக இவை அமைகின்றன. இவை 1993-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பாப்பரசர் பதவியேற்ற 15 வது ஆண்டு நினைவுக்கு இத்தாலிய வானொலி, தொலைக்காட்சி என்பனவற்றிற்கென வழங்கப்பட்ட ஒரு வினா விடை ஆக்கமாகும்.

இந் நூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்களை நோக்குகையில் முக்கியமானவைகளாகப் பின்வருவனவற்றைப் களும்

- கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைத்துவம் (Papacy)

- கொம்யூனிசத்தின் தவறுகளும் அதன் பால் திருச்சபைக்குள்ள கடமைகளும்

- மாபெரும் மனித சர்ச்சைகளாக விளங்கும் கடவுள், மீட்பு, மனித மாண்பு, உலகின் தீமை ஆகிய அம்சங்களைப் பிரதானமாகக் கொண்டு இந் நூல் அமைந்துள்ளது. முன் எப்போதும் அறிந்து கொள்ள முடியாதிருந்த மிகவும் சுவாரஸ்யமான பாப்பரசரின் சிந்தனைகளை அறிந்து கொள்ள உதவும் ஒரு சாளரமாகவும் இந் நூல் தோற்றம் பெற்றுள்ளது.



## இலங்கையில் சர்ச்சை

உலக மத விடயங்கள் பற்றி குறிப்பிடுகையில் குறிப்பாக தூர கிழக்கு நாடுகளின் மதங்கள் என விபரிக்கப்படும் இஸ்லாம், பௌத்தம் பற்றி பல்வேறு விடயங்கள் இங்குகுறிப்பிடப்பட்டுள்ளன. பௌத்தம் பற்றி விபரிக்கையில் பௌத்தம் மோக்ஷத்தில் நோக்குகையில் ஒரு 'கடவுள்' அற்ற ஒரு ஒழுங்கு முறையெனவும் அங்கு உலகம் தீமையானது என்ற நம்பிக்கையிலே ஞானம் பிறப்பதாகவும் அமைகிறதுஎன்று குறிப்பிடப்பட்டுள்ளது. (He Describes Buddhism as''in LargeMeasure an Atheistic System'' in Which Enlightenment Comes Down to the Conviction That The World is Bad)

பௌத்தம் பற்றிய இவ் எண்ணக்கரு இலங்கை பௌத்த மதத்தினரின் கடும் எதிர் அம்மதம் சம்பந்தமாக அவர் வெளிப்படுத்திய குறை நிலை விடயங்கள் என்பன மேலும் பல மடங்கு இரட்டிப்புக் கவனத்தையும் முக்கியத்துவத்தையும் ஈர்த்துள்ளன இதனால்பலரது பல மாதிரியான விமர்சனங்களுக்கு, வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களும், மதத் தலைமைப் பீடங்களும் அதனோடு தொடர்புகொண்டவைகளும் உள்ளாகிவருவது தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிட்டது.

## அருட்திரு அலோய் பீரிஸ்

இது இவ்வாறு இருக்கையில் கத்தோலிக்க மதம் மிக இறுக்கமான ஒழுக்க,வரம்புகளைக் கொண்ட ஒரு பாரம்பரிய பாரிய நிறுவனம். இந் நிறுவனத்தின் அதிஉயர் படிமுறையில் (HIERAR HY) விளங்கும் குருக்கள், துறவிகள் போன்றவர்கள் மேலும் இறுக்கமான ஒரு கட்டமைப்புக்குள்ளேயே அமைந்து வருகின்றனர்-இவற்றில் முக்கியமானதும் குறிப்பிட்டுக் கொள்ளக் கூடியதுமானதும் என்னவெனில் ஒரு கத்தோலிக்க மத குரவரே, பாப்பரசர் தனது அறியாத்தன்மையின் பொருட்டு வெளியிட்ட பௌத்த மதக்கருத்து பற்றி இலங்கை பௌத்தர்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என வலியுறுத்தியுள்ளமையாகும் அருட்திரு அலோசியஸ் பீரிஸ் என்னும் இக்குரவர் இயேசு சபையைச் சார்ந்தவர். இலங்கைப் பல்கலைக் கழகமொன்றில் பௌத்த சித்தாந்தத்தில் கலாநிதி பட்டப்படிப்பை மேற்கொண்ட முதல் கிறிஸ்தவர் எனவும் வர்ணிக்கப்படுபவர். தற்போது துல்லானா [Tul lana] என்னும் ஆய்வு நிறுவனத்தின் இயக்குனராகவும் களனிப்பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளராகவும் விளங்கும் இவர் வெளிப்படுத்திய கருத்துக்கு இவர் கருத்தியல் ரீதியான தகைமை உடையவர் என்பதையும் நாம் விளங்கிக் கொள்ளக் கூடியதாகவுள்ளது

## நிவேதனன்

இவரது இரு முக்கிய நூல்

# கவிதைகள் முளைவிடும் தேசம்

சிறுகதை, நாவல், கவிதை, நாடகம் என்கிற நவீன இலக்கிய வடிவங்களில் கவிதை தமிழில் பெரு வளர்ச்சி கண்டு வருவதை சமீப கால அதன் காத்திரத்தன் மையுடனான பெருக்கம்

புதுக் கவிதைக்கென தமிழ் நாட்டிலிருந்து வெளிவந்த கவிதை இதழ் 'வானம்பாடி' முற்றிலும் மானுடத்தின் குரலாக வெளிவர வேண்டும் என்று பலர் சேர்ந்து இந்த இதழை ஆரம்பித்தனர். வந்த வேகத்திலேயே அந்த

இ. இரத்தினம், முருகையன் சேர்ந்து காலாண்டு இதழாக 'நோக்கை' வெளியிட்டனர். இதுவும் மொத்தம் ஆறு இதழ்களே வெளி வந்தன.

1964-ஆம் ஆண்டில் நோ

தேன்மொழியும், நோக்கும் கவிதையில் வடிவத்திற்கே முக்கியத்துவம் கொடுத்தன. தூய கலை நோக்கை இந்த இதழ்கள் முதன்மைப் படுத்தின.

இங்கு ஒரு விஷயத்தை

கவிதை தமிழில் பெரு வளர்ச்சி கண்டு வருவதை சமீப கால அதன் காத்திரத்தன்மையுடனான பெருக்கம் சுட்டி நிற்கின்றது.

தமிழகத்திலும் சரி, தமிழீழத்திலும் சரி, புலம்பெயர்ந்தவர்கள் வாழுகின்ற ஐரோப்பா நாடுகளிலும் சரி, கொழும்பு. மலையகம் ஆகிய இடங்களிலாயினும் சரி தமிழில் கவிதை வடிவம் மிக இறுக்கத்துடன் தற்கால சமூக வாழ்வையும் அதனோடு இணைந்த போராட்டத்தின் திசையையும் நன்கு பதிவு செய்து கொள்கின்றது.

இந்த வகையில் தமிழ் மொழியில் நாவல், சிறுகதை, நாடகம் என்கிற இலக்கிய வடிவங்களை விட கவிதை உச்சத்தை தொட்டு நிற்கின்றது.

முற்றுமுழுதாக கவிதைகளுக்கென தமிழில் இதழ்கள் வெளிவரத் தொடங்கியமை சமீபத்தில்தான். இதற்கு முன்னர் அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் முற்றிலும் கவிதைகளைச் சுமந்தே சஞ்சிகைகள் வெளிவந்திருக்கின்றன; வெளிவருகின்றன.

தமிழில் கவிதை இலக்கியத்தை மட்டும் சுமந்து வெளிவந்த முதல் இதழ் 'குயில்' என்று சொல்லப்படுகிறது. பாரதிதாசனே இதன் ஆசிரியராக இருந்துள்ளார். இக்கவிஞர் தன் பொது வாழ்வுடன் கூடிய அனுபவ தெறிப்புக்களை இந்த இதழில் நன்கு பதிவு செய்திருக்கிறார்.

பத்திரிகைச் செய்தி போல தான் நாளாந்தம் கலந்து கொள்ளும் நிகழ்வுகளின் தொகுப்பாக அதில் கவிதைகள் வெளிவந்தன.

'குயில்' இதழை அடுத்து 'சுரதா' 'நாணல்' 'வானம்பாடி' 'ழ' போன்றமுற்றிலும் கவிதைகளுக்கென இதழ்கள் தமிழகத்தில் வெளிவந்தன.

என்று பலர் சேர்ந்து இந்த இதழை ஆரம்பித்தனர். வந்த வேகத்திலேயே அந்த இதழ் நின்று போனது.

இதற்கு இந்த இதழை வெளியிட்ட கவிஞர்களின் உள் முரண்பாடுகளே காரணம் எனச் சொல்லப்படுவதுண்டு. 'வானம்பாடிக்' கவிஞர்கள் என தம்மை முத்திரை குத்தி- அடையாளம் காட்டிக் கொண்ட இதன் வெளியீட்டுக் குழுவினர் தமக்குள் யார் புதுக் கவிதையின் 'பிதாமகர்' என்ற போட்டியில் சிக்குண்டு... குழாயடிச் சண்டையாக எண்பதுகளின் இறுதிவரைதீவிரமாக(வானம்பாடி 70 களில் நின்றபின்னரும்) கோஷமெழுப்பி வந்தனர். தற்போதும் இடையிடையே மெதுவாக இக்கோஷங்கள் கேட்கத்தான் செய்கின்றன.

சரி! அவர்களின் கூச்சல்களைச்சொல்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல; இவ்வாறு தான் ஈழத்து கவிதை இதழ்களுக்கும் நீண்ட வரலாறு உண்டு.

**1955**-ஆம் ஆண்டில் -தேன்மொழி என்ற கவிதை இதழ் வெளிவந்தது. மஹாகவி, வரதர் இருவரும் இணைந்தே இதை வெளியிட்டனர். கவிதைக்கென வெளிவந்த இந்த இதழ், 16 பக்கங்கள் கொண்ட சஞ்சிகையாக மாதம்தோறும் வந்தது.

முதல் நான்கு இதழ்கள் ஒழுங்காக வந்தன. ஐந்தாம் இதழ் 56 ஆம் ஆண்டு தை, மாசி மாதங்களுக்கும் சேர்த்தே வந்தது. ஆறாவது இதழ் நான்கு மாதங்களின்பின் வந்தது. அதுவே 'தேன்மொழியின்' இறுதி இதழாகும்.

தேன்மொழிக்குப்பின்னர் 8 ஆண்டுகள் கழித்து, 64 ஆம் ஆண்டில் 'நோக்கு' என்ற கவிதை இதழ் வெளிவந்தது.

வந்தன.

**1964**-ஆம் ஆண்டில் நோக்கு நான்கு இதழ்கள் வெளிவந்தன. இதற்கு அடுத்த ஆண்டு நோக்கின் ஐந்தாவது இதழ் வெளிவந்தது. ஐந்தாண்டுகால இடைவெளிக்குப் பின்னர் பல்வகைப்பட்ட

**இந்த மண்ணில் நிகழும் அற்புதம் மிக்க போராட்ட நிகழ்வுகள் துப்பாக்கிகளுடனும், பேனாக்களுடனும் எமது இளைஞர்-யுவதிகளை நிற்க வைத்துள்ளன.**

போக்குகளை உடைய பலரையும் இணைத்துக்கொண்டு நோக்கின் ஆறாவது இதழ் வெளிவந்தது. இந்த இதழே நோக்கின் இறுதிஇதழானது.

ஈழத்தின் மூன்றாவது கவிதை இதழ், நோக்கைத் தொடர்ந்து'கவிஞன்' என்ற இதழ் வெளிவந்தது. சண்முகம் சிவலிங்கமும்-எம்.ஏ.நுஃமானும் சேர்ந்து இந்த இதழை வெளியிட்டனர். காலாண்டு இதழாக வெளிவந்த இந்த 'கவிஞன்' ஐந்தாவது இதழுடன் நின்றது.

தேன்மொழி, நோக்கு இதழ்களை விட 'கவிஞன்' இதழ் உள்ளடக்கத்தில் வித்தியாசமானது. செறிவுள்ள கருத்திற்கு 'கவிஞன்' முக்கியத்துவம் கொடுத்தது, நவீனமயப்படுத்தப்பட்ட யாப்பு வழிக்கவிதைகளே இதில் பெரிதும் இடம்பெற்றன.

படுத்தின.

இங்கு ஒரு விஷயத்தை நாம் தெளிவாக நோக்கலாம் ஈழத்தில் பல்சுவை சார்ந்த சஞ்சிகையாயினும் சரி, முற்றிலும் இலக்கியம் சார்ந்த சஞ்சிகையானாலும் சரி, முற்றிலும் கவிதைக்கான இதழானாலும் சரி நீண்ட காலம் நிலைத்திருக்கவில்லை

இவை சிறு குழுவினரை மட்டும் வசீகரிப்பதுதான் அற்ப ஆயுளில் முடிவதற்கான காரணமாகும். ஆனால்-'நோக்கு' 'கவிஞன்' இதழ்களை பொறுத்தவரை படைப்பாளிகளின் ஆதரவும் அற்று இருந்ததற்கான அடையாளமும் உள்ளது. அவரவர்க்குரியஅரசியல் சார்ந்த போக்குகள் குழுமனப்பான்மைக்கு இட்டுச் சென்றிருக்கலாம்.

இதனுடன் - மேற்சொன்ன இரு இதழ்களும்பிற மொழிக் கவிதைகளை மொழி பெயர்ப்புச் செய்து பிரசுரிப்பதிலும் தீவிரம் காட்டியுள்ளன.

இளைஞர்கள் மத்தியில் புதுக் கவிதைப்புயல் தமிழகத்திலும் ஈழத்திலும் ஒரே காலத்தில் வீசத் தொடங்கின.

வவுனியா - திலீபன்

தமிழகத்தை விட ஈழத்தில் அது முற்போக்கான கவிதைகள் படைப்பதற்கு ஏதுவானதாக இருந்தன.

73 ஆம் ஆண்டில் தென்னிலங்கையிலிருந்து 'க-வி-தை' என்ற புதுக் கவிதை இதழ் ஒன்று வெளிவந்த வேகத்திலேயே நின்று போனது.

இன்றைய நிலையில் தமிழ் மண்ணில் கவிதை இதழ்களின் தேவை அதிகம் உணரப்பட்டிருக்கின்றது. படைப்பாளிகள், வாசகர்களின் தொகை

(7ஆம் பக்கம் பார்க்க)

டிருக்கும் விடயங்களை நோக்குகையில் முக்கியமானவைகளாகப் பின்வருவனவற்றைப் பார்க்கலாம்.

- இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் தொடருகின்ற முக்கியத்துவம்

- எதிர்கால கிறிஸ்தவ மதப் பிரிவுகளுக் கிடையிலான ஒன்றிப்புக்கும், ஏனைய மதங்களுக்கிடையிலான உரையாடல்களுக்குமான நம்பிக்கைகள்.

- அறநெறி ஒழுக்கவியலில் (MORALITY) ஆழ்ந்து வலியுறுத்தும் கருத்துக்கள் உதாரணமாக கருத்தடை கருவழித்தல் போன்றவை

- உலகின் ஏனைய பிரதான மதங்களின் நன்மைத் தனங்களும் அவற்றின் குறைநிலை

பௌத்தம் பற்றிய இவ் எண்ணக்கரு இலங்கை பௌத்த மதத்தினரின் கடும் எதிர்ப்புக்குள்ளாகி ஒரு சர்ச்சையான அம்சமாகிவிட்டது. தேரவாத, மகாஜன என்றஇரு பிரிவுசித்தாத்தங்களாக பௌத்தம் பின்பற்றப்பட்டு வருகின்ற போதிலும் இலங்கையில்இவைஒருகலந்த நிலையே காணப்படுவதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இலங்கை சுமார் 70% க்கும் அதிகமான பௌத்த மதத்தினரைக் கொண்டது. அத்துடன் அரச மதமாகவும் பௌத்தம் அரசமைப்பில் இடம் பெற்றுள்ளது. இத்தனைக்கும் மத்தியில் பௌத்த மத நாடென வலிந்து கருதப்படும் நாடொன்றிற்கான கத்தோலிக்க மத ஆன்மீக தலைவரின் விஜயம்,

இவரது இரு முக்கிய நூல்கள் மூலம் [1. A Christian Experience of Buddhism 2. An Asian Theology Of Liberation] இவரை ஒரு மானிட விடுதலையாளனாகவும் அடையாளம் காணக் கூடியதாகவும் உள்ளது.

இந்த வேளையில் எது எப்படியிருப்பினும் இங்கு பரிமாறப்பட்ட கருத்துக்கள் என்பன என்ன தோரணைகளில் பரிமாறப்பட்டன என்ற அம்சங்களே இக் கருத்துக்களின் முக்கியத்துவத்தையும் உண்மைத்தன்மைகளையும்மேலும் தெளிவுறுத்துவனவாக அமையும்.

## வெளிச்சம் வற்றிய இரவில். . .

இருள் கவிந்து
பல மணி நேரமாயிற்று
என் நெஞ்சிலும்
இறுகிய இருள் விலகாமல்-
சிந்தனையின் மையத்தில்
கவிந்து கவிந்தே . .

காலம் கரைகிறது.

இந்தக் குடிசை
இடம் பெயர்ந்த ஜீவன்களுக்கு
இருப்பிடமாகிற்று.

அருகே
புரண்டு படுக்கும்
மனைவி . . . குழந்தை . . .
மனங்கள் புரளும் சப்தம்
கேட்டுக் கொள்கிறதோ . . .
அசையும்
குழந்தையின் கைகளை
தொட்டதும்-
பசிக் களைப்பின்
வெம்மை தொட்டுவரும்
ஏக்க மூச்சு
என்னையும் சுட்டது.
தூக்கம் எனைத் தொட
மறுத்த அக் கணத்தில்
விழியில் துளிர்க்கும்
சுடு நீரை
துடைக்கக் கூட
என் கை மறுக்கிறது.

வெளியில் இன்னும்
வெளிச்சம் இல்லை
என் வாழ்க்கையிலும் தான்!.

- கோகுலன்

# அல்ஜீரிய விமானக் கடத்தலும் அரபுலக - மேற்குலக பண்பாட்டு மோதலும்

செச்சென்யா மீதான ருஷ்யப் படையெடுப்பு, பொசுனியாவில் போர் நிறுத்தம் போன்ற பரபரப்பான செய்திகட்கு மத்தியிலும் அல்ஜீரிய விமானக் கடத்தல் சம்பவம் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது. கடந்த 3 வருடங்கட்கு மேலாக அல்ஜீரியாவில் நடந்துவரும் மிக மோசமான உள்நாட்டுப் போரின் பக்கம் இது உலகின் கவனத்தை மீண்டும் நகர்த்தியுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளிலுமே மொத்தமாகப் பத்தாயிரம் பேர் வரை கொல்லப்பட்டு விட்டதாக அந்நாட்டின் இராணுவ ஆட்சியின் சனாதிபதியாகவுள்ள லிமின் செறாபால் (Liaminezeroual) இப்போது ஒப்புக் கொள்கின்றார். இவ்வருடம் இன்னொரு எண்ணாயிரம் பேர்வரை பலியானதாக கூறப்படுகிறது. இதுவரை 70 வெளிநாட்டவரும் கொல்லப்பட்டு விட்டனர். இதில் அல்ஜீரியாவின் முன்னைய குடியேற்றவாத ஆட்சியாளரான பிரான்ஸைச் சேர்ந்தவர்கள் இருபது பேர் என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய அல்ஜீரியாவின் நிலைமையென்பது ''மோசமான பயங்கரமான ஒரு கனவு'' என்கின்றது. மத்திய கிழக்கு மனித உரிமை காப்பு அமைப்பு. அல்ஜீரியாவில் நாளுக்கு நாள் வேகமாக முனைப்படைந்து வரும் இசுலாமிய அடிப்படைவாத அமைப்புக்களின் தீவிர வளர்ச்சியானது வட ஆபிரிக்க மேற்காசிய பகுதிகளிலே புதியதொரு அரசியல் பரிமாணத்தை விரைவில் தோற்றுவிக்கும் என நம்பப்படுகிறது

## விமானக் கடத்தல் நாடகம்

எனவே தான் இத்தகைய பின்னணியிலே கடந்த சனியன்று பரிசுக்கு செல்வதற்காக அல்ஜீயர்ஸ் விமான நிலையத்திலே தரித்து நின்ற ஏர் பிரான்சின் ஏர்பஸ் விமானக் கடத்தல் சம்பவம் இப்போது முறியடிக்கப்பட்டு விட்டதாக கூறப்பட்டாலும் இதன் விளைவுகள் பிரான்சில் எதிரொலிக்கும் என்றே கருதப்படுகின்றது. அல்ஜீரிய இராணுவ அரசுக்கு ஆயுத, நிதி உதவிகளை மிகத் தாராளமாக வழங்கிவரும் பிரான்சை ஒரு. இக்கட்டான நிலைக்கு

இவர்களே அல்ஜீரியாவிலுள்ள வெளிநாட்டோரைக் கடந்த வருடம் நவம்பர் மாதத்திலிருந்து கொன்று வருபவர்களாவர். வெளிநாட்டவரைக் கொல்வதற்கான இவர்கள் கூறும் பிரதான காரணம் தற்போதைய அடக்கு முறை இராணுவ அரசு வெளிநாட்டவர் உதவி இல்லாவிட்டால் இரண்டு வாரங்கள் கூட தாக்குப்பிடிக்காது என்பதேயாகின்றது. அத்தோடு இவ்விமானக்கடத்தல் சம்பவம் இசுலாமிய போராளிகட்கு எதிராக முனைப்பாக பல இராணுவ நடவடிக்கைகளை அண்மைக் காலமாக மேற்கொள்ளும் அல்ஜீரிய அரசின் இயலாத் தன்மையையும் புலப்படுத்தி விட்டது. அத்தோடு 1991-ம் ஆண்டு டிசபர் மாதமளவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றியீட்டும் நிலையில் இருந்த இசுலாமிய அடிப்படை வாத அமைப்புகளின் முன்னணியான இசுலாமிய மீட்பு முன்னணி (FIS Islamic Salvation Front) தடைசெய்யப்பட்டதும் தேர்தல் முடிவுகளை இடைநிறுத்தி இராணுவம் சட்டவிரோதமாக ஆட்சியைக் கைப்பற்றிய தன் நினைவு நாளையும் குறித்து நிற்கின்றது. 40 மணித்தியாலத்திற்கு மேலாக இவ் விமானத்தை சுற்றி வளைத்த நிஞ்ஜா (Ninjas) எனப்படும் அல்ஜீரியாவின் விசேட காவல்துறை படையணியால் கடத்தலை முறியடிக்க முடியவில்லை. (கறுப்பு நிறசீருடையையும் கறுப்பு நிற முகமூடியையும் கழுத்துவரை அணிந்த பலம்வாய்ந்த நிஞ்ஜா படையணி இசுலாமிய அடிப்படைவாதப் போராளிகட்கு எதிராக போரிட விசேடமாக உருவாக்கப்பட்டது) விமானத்திலிருந்த அல்ஜீரியாவில் உள்ள பிரான்சிய தூதரக ஊழியர் ஒருவர் கொல்லப்பட்டு வெளியில் வீசப்பட்டபின் - பிரான்சின் அழுத்தத்தின் பின் - அல்ஜீரிய அரசு வேண்டாவெறுப்பாக விமானத்தைக் கிளம்பிச் செல்ல அனுமதித்தது தென் பிரான்சின் ஒதுக்குப் புறமான விமான நிலையமொன்றில் தரையிறங்கிய இவ் விமானத்தை சென்ற திங்களன்று மாலையில் திடீரென மறைவாக நெருங்கிய பிரான்சின் விசேட காவல்துறை அணி விமானத்தின் முன் கதவை

த்தல் சம்பவம் முறியடிக்கப் பட்டபோதும் இசுலாமியப் போராளிகள் விரும்பியது எதுவோ அது நிறைவேறிவிட்டது. அல்ஜீரிய அரசின் நீதி பிழைத்த போக்கிற்கு துணை நிற்கும் பிரான்சின் நிலைப்பாடு இன்று உலக அரங்கிலே இப்போது அம்பலப்ப

சிக்கல்களின் பின் புதிய ஆட்சியொன்றை அமைக்க 1991ம் ஆண்டு டிசம்பரில் நடாத்தப்பட்ட பொதுத் தேர்தலில் FIS எனப்படும் இசுலாமிய மீட்பு முன்னணி பெரு வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் நிலை தோன்றிய போதே இச்சதி முடுக்கி விட



அலிபெலடிச்சும் அபாசிமதானியும்

## இப்போது சிறையிலிருக்கும் அல்ஜீரியாவின் அடுத்த ஆட்சியாளர்?

டுத்தப்பட்டு கேள்விக்குறியாக்கப்பட்டும் விட்டது.

## இசுலாமிய வாதிகளின் வளர்ச்சி

11-3-94-ம் திகதிய வெள்ளி மஞ்சரியில் ''விளங்காப் பொருளாகிவிட்ட அல்ஜீரிய சனநாயகம்'' என்கிற தலைப்பில் இன்றைய அல்ஜீரிய உள்நாட்டுப் போருக்கான வரலாற்று நிலைகளை சுருக்கமாக குறிப்பிட்டிருந்தோம். 132 வருட பிரான்சின் கொடிய குடியேற்றவாத ஆட்சியின் போது 3 இலட்சம் பேர் கொல்லப்பட்ட பின் 1962-ம் ஆண்டு விடிவு பெற்ற அல்ஜீரியாவில் தொடக்கத்தில் இடதுசாரிப் போக்குள்ள விடுதலை அமைப்பு ஆட்சி நடத்தியதும் பின் அதுவீழ்ச்சியடைய தமது தேசிய பண்பினை சிதைத்த மேற்கத்தைய ஏகாதிபத்தியர்கட்கு எதிரான முன்னைய தமது விடுதலைப் போரின் தொடர்ச்சியாக - தற்போதைய மேற்குலக ஆதரவு பெற்ற அரசை எதிர்த்து இரண்டாவது போரை நடாத்துவ

ப்பட்டது. இதன் பயனாக தேர்தல் முடிவுகள் இடைநிறுத்தப்பட்டு 1992ம் ஆண்டுசனவரியில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றி சனநாயகம் என்னும் முறைமையைக் கேலிக்கூத்தாக்கியது. அப்போது அமெரிக்கா, ஐரோப்பா போன்றவை மெலிதாக எதிர்ப்புக் குரலை எழுப்பின. ஆனால் உள்ளுக்குள் மகிழ்ந்தன; நிம்மதிப் பெருமூச்சுவிட்டன. அன்று தொட்டு அல்ஜீரியாவின் வரலாறு மாற்றி எழுதப்படத்தொடங்கப்பட்டது. மக்களிடையே மிகச் செல்வாக்குப் பெற்ற இசுலாமிய மீட்பு முன்னணி தடைசெய்யப்பட்டது. அதன் தலைவர்களை இளையவரான அலி பெலடிச் (Ali Belhadi) என்பவரும் முதியவருமான அபாசி மதானியும் (Abbasi madani) சிறையிலிடப்பட்டனர். கொடுங் கோன்மை கட்டவிழ்த்து விடப்பட்டது. எனவே இசுலாமிய தற்காப்பு உணர்வு இதற்குப் பதிலாக வளர்ந்து மேற்குலக வெறுப்பு கொழுந்து விட்டு எரிந்தது. இன்று அல்ஜீரிய அரசின்

ஜியர்ஸ் போன்ற முக்கிய மாநகர்களில் நகர் எல்லைக் கப்பால் அரசின் ஆணையென்பது செல்லாக் காசாகி விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. வறுமையிலும் ஏழ்மையிலும் வாடும் ஏழை மக்களின் நம்பிக்கை ஒளியாக- இசுலாத்தின் அடிப்படையிலே தீர்வொன்றை காணமுடியும் என்கிற நம்பிக்கையூட்டும் சக்தியாக FIS வளர்கின்றது. இப்போது அடிமட்ட இராணுவத்தில் இவர்கள் ஊடுருவல் நிரம்பி விட்டதாக கூறப்படுகின்றது. முதன் முறையாக இப் போராளிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் அல்ஜீரியாவின் உள்நாட்டுப் பகுதிகட்கு சென்று வந்த பி.பி.சி, தயாரிப்பாளர் பில்றீஸ் (Phil Rees) கூறும் கதைகள் வியப்புக்குரியவை. தீவிரத்தன்மை வாய்ந்த G.I.A அமைப்பு தவிர இசுலாமிய மீட்பு முன்னணியின் இன்னொரு இராணுவப் பிரிவான இசுலாமிய மீட்பிற்கான இராணுவம் (A.I.S Army of Islamic salvation) எனப்படும் அமைப்பின் போராளிகளை முதல் தடவையாக சந்தித்த இவர் அண்மையில் ''அல்ஜீரியாவின் இரகசியப் போர்'' என்கிற தலைப்பில் தயாரித்து அளித்த நிகழ்வில் மேற்குலகின் கட்டுக் கதைகட்கு மாறாக ஒழுங்கும் கட்டுப்பாடும் நிறைந்த இராணுவ அமைப்புக்களாக இசுலாமிய போராளி அமைப்புக்களை வருணிக்கின்றார். மிகப் பரந்த நிலப்பகுதி இவர்கள் கட்டுப்பாட்டிலிருப்பதும் நவீன தொலைத் தொடர்பு மையங்கள், கள வைத்திய நிலையங்கள், சீருடை, சுடுகலன், உபகரணங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் என்பனவற்றை ''போராளிகள்'' இயக்குவதும் இவரது தகவல்கள் மூலம் தெரிய வந்துள்ளது. அத்தோடு கணனிகள், பக்ஸ் Fax பொறிகள், வரைபடங்கள், வெடி மருந்துகள், வெடிக்கவைக்கும் கருவிகள் என்பவற்றைக் கொண்ட நவீன மயப்படுத்தப்பட்ட அமைப்பாக இக்குழுக்கள் தோற்றம் பெறுவதாக இவர் குறிப்பிடுகின்றார். 132 வருட

## இசுலாமிய தீர்வு

அத்தோடு இன்னொரு பிரதான காரணியும் இவர்கள் வளர்ச்சிக்கு தூண்டுதலாக அமைந்து விட்டது. 1989-ம் ஆண்டின் பின் ஆப்கான் போர் முடிவடைந்த பின் எகிப்து அல்ஜீரியா போன்ற இடங்கட்கு திரும்பிய பல நூற்றுக் கணக்கான முஜாகுதின் இளம் இசுலாமியப் போராளிகளின் பங்களிப்பே அது. இங்குள்ள வியப்பு என்னவென்றால் சோவியத்தின் வல்லாண்மைக்கு எதிராக போராடிய இவர்கட்கு அமெரிக்க சி.ஐ.ஏ அமைப்பும் பாக்கித்தானின் ISI உளவு அமைப்பும் புகட்டிய இராணுவ தொழினுட்ப அறிவு இப்போது இங்கே பயன்படுத்தப்படுவது தான். அது மட்டுமன்றி ஆப்கான் போராட்டத்திற்கு என வழங்கப்பட்ட பெருமளவு நிதியும் இத்தகைய இசுலாமிய போராளிகட்கு திசை திருப்பப்பட்டதாகவும் இப்போது தெரிய வந்துள்ளது. இவற்றோடு இசுலாமிய உணர்வென்பது தீவிரமடைவது இசுலாமிய தீர்வொன்று ஒன்றை இவர்கள் நாட உலக அரசியல் அரங்கின் பல்வேறு அரசியல் நிகழ்வுகளும் காரணமாகின எனவும் பல ஆய்வாளர் கருதுகின்றனர். ஈராக் பணிய வைக்கப்பட்டபோது அரபுலகம் கைகட்டி நின்றமை - மேற்காசிய அமைதி உடன்பாட்டிற்கான எதிர்ப்பு- அதைத்தொடர்ந்து கெப்ரோன் மசூதி படுகொலையின் தாக்கம்-பொசுனிய முசுலிம்கட்கு எதிரான கொடுமைகளை உலகம் கைகட்டி பார்த்து நிற்கின்றமை எனப் பல காரணிகள் இவர்கள் தன்மானத்தை தாக்குவதாக தெரிகின்றது. எனவே இத்தகைய நிலையிலே அல்ஜீரிய இராணுவம் எவ்வளவு காலம் அரசுக்கு சாதகமாக செயற்படும் எனச் சொல்ல முடியாது எனக் கருதப்படுகின்றது. இத்தகைய நிலையிலே கடந்த மார்ச் மாதத்தின் இரண்டாம்வாரம் கிழக்கு அல்ஜீரியப் பகுதியில் நடைபெற்ற மிகப் பாரிய

நெருக்கடிகள் காரணமாகவே அண்மையில் செப்டெம்பர் மாதமளவில் சனாதிபதி செறாபால் 3 வருடங்கட்கு மேலாக சிறையில் வாடும் பிரெஞ்சுப் பல்கலைக்கழகங்களிலே படித்துப் பட்டம் பெற்ற இரு தலைவர்களான பெலடிச்சையும், மதானியையும் அணுகினார். போர்நிறுத்தமொன்றை ஏற்படுத்தித்தருமாறு கோரிய சனாதிபதி 63 வயதான மதானியையும், 38 வயதான பெலடிச்சையும் கடுமையான சிறையிலிருந்து வீட்டுக் காவலுக்கு மாற்றினார் இச்செய்தி அல்ஜீரியாவில் மட்டுமன்றி உலகெங்குமே பரபரப்பை ஏற்படுத்தியது இவ்விரு தலைவர்கட்கும் தமது குழுக்களோடு தொடர்பு கொள்ள வேண்டி தொலை தொடர்பு வசதிகள் கூட அரசால் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டன. ஆனால் ஆறு வாரமே நீடித்த அமைதி முயற்சி இறுதியில் தோல்வியிலேயே முடிந்தது. இப்போது இரு தலைவர்களும் மீண்டும் சிறைக்கு கொண்டு போகப்பட்டுவிட்டுவிட்டனர். அல்ஜீரிய சனாதிபதியோ போர்நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கு பதிலாக போரைத் தொடருமாறு தூண்டியதாக இவர்கள் மீது பழிபோடுகின்றார். இவர்களோ தம்மை முற்றாக விடுவித்து சுதந்திரமாக இயங்க விட்டாலோ அமைதி முயற்சியில் தாம் ஈடுபட முடியும் என அரசிடம் கூறியதாக தெரிவிக்கின்றனர். எது எப்படியிருந்தபோதும் இப்போது மீண்டும் வன்முறை அல்ஜீரியாவில் கொடிகட்டிப் பறக்கின்றது. வாராந்தம் 300 பேர் வரை கொல்லப்படுவதாக அங்கு இப்போது சடலங்கள் எண்ணப்படுவதில்லை என்பதாக சருவதேச மன்னிப்புச்சபை கூறுகிறது. இதேவேளை இராணுவத்திற்குள்ளே உள்ள கடும்போக்காளர் அமைதி முயற்சிகளை விரும்பவில்லை என்றும் தெரிகிறது. இராணுவ மேலாளரான ஜெனரல் லமாரி என்பவர் என்னவிலை கொடுத்தேனும் இச்சக்திகளை அழிப்போம் என அறைகூவல் விடுக்கின்றார். இப்போது இராணுவத் தீர்வே வேண்டும் என்போரின் கையே ஓங்கி இருப்பதாலே உள்நாட்டுப் போரால் அல்ஜீரியா இரத்தக் கண்ணீர் வடிக்கின்றது. ''முற்றாக அழித்தொழிப்போர்'' (Eradicators) என அழைக்கப்படும் இந்த இராணுவ கடும்

## பாலகுமாரன்

ஒரு இக்கட்டான நிலைக்கு இச்சம்பவம் இப்போது தள்ளி விட்டது. பிரான்சிய விமானத்தை கடத்தி இப்போது கொல்லப்பட்டு விட்ட நான்கு இசுலாமியப் போராளிகளும் அல்ஜீரியாவின் மிகத் தீவிரமான இசுலாமிய அடிப்படைவாத அமைப்பான ஆயுதம் தாங்கிய இசுலாமியக் குழுவினைச் சேர்ந்தவர்கள் என நம்பப்படுகின்றது. G. I. A. (Armed ISlamic Gr o u p) எனச் சுருக்கி அழைக்கப்படும் விமானத்தின் முன் கதவையும், பின் கதவையும் ஒரே நேரத்தில் தாக்கி திறந்து- விமானத்தின் முன் பக்கம் இசுலாமியப் போராளிகளின் கவனத்தை திருப்ப போலி வெடிகுண்டுகளை வீசி - விமானத்தை கடத்திய நால்வரையும் கொன்று 15 நிமிடத்துக்குள் கடத்தல் நாடகத்தை முடிவிற்கு கொண்டுவந்தது, மாபெரும் வெற்றி என பிரான்சிய அரசு கூறியபோதும், வெற்றிகரமாக விமானக் கட பெற்ற அரசை எதிர்த்து இரண்டாவது போரை நடாத்துவதாக கூறிக் கொள்ளும் இசுலாமிய அமைப்புக்கள் வளர்ச்சி பற்றியும் அதில் குறிப்பிட்டோம். இப்போதைய மிக மோசமான இழுபறி நிலைக்கு அல்ஜீரிய இராணுவமும் மேற்குலகும் இணைந்து மேற் கொண்ட சனநாயக விரோத சதி நடவடிக்கையே காரணம் என்பது மீண்டும் இங்கே சொல்ல வேண்டிய செய்தி. பற்பல இன்று அல்ஜீரிய அரசின் எதிர்காலமே கேள்விக் குறியாகி விட்டது.

இப்போது இசுலாமிய மீட்பு முன்னணியின் வளர்ச்சி பிரமிக்கத்தக்கது என மேற்குலகே ஒப்புக்கொள்ள வேண்டிய நிலை. அல்ஜீரியாவை பகலில் இராணுவ அரசும் இரவில் இசுலாமிய மீட்பு முன்னணியுமே ஆள்வதாக கூறப்படுகின்றது. பகலில் கூட அல் குறிப்பிடுகின்றார். 132 வருட பிரான்சிய குடியேற்ற வாதத்தின் விளைவுகள் 1954-62 ஆண்டிற்கு இடையில் நடைபெற்ற விடுதலைப் போரின் தாக்கங்கள் எல்லாமே இப்போது மேற்குலக பிரெஞ்சு - அரபுலக இசுலாமிய பண்பாட்டு மோதலாக தவிர்க்க முடியாமல் உருவெடுத்து விட்டதால் இனி இதற்கு இடை நிலை என்பதே கிடையாது என முத்தாய்ப்பு வைக்கின்றார். நடைபெற்ற மிகப் பாரிய சிறையுடைப்பில் இராணுவத்தின் சிலர் போராளிகட்கு உதவியதாக கூறப்படுகின்றது. இச்சிறையுடைப்பின் போது ஆயிரத்திற்கும் மேற்பட்ட இசுலாமியஅடிப்படை வாதப் போராளிகள் என சந்தேகிக்கப்பட்டோர் தப்பியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### 6 வாரம் நீடித்த அமைதி முயற்சி

இத்தகைய அதிகரிக்கும் டும் இந்த இராணுவ கடும் போக்காளரின் நடவடிக்கைகட்குத் தமது போராட்டத்தில் முதற் தடவையாகக் குண்டுகளை வெடிக்க வைத்து தமது பதிலை GIA அமைப்பு தெரிவித்து வருகின்றது. இவ்விமானக் கடத்தலும், அதிகரித்த வன்முறையின் ஒரு வெளிப்பாடாகவே கருதப்படுகிறது

அல்ஜீரிய நெருக்கடியில் தவிர்க்க முடியாத வகையில்
6-ம் பக்கம் பார்க்க)

# இந்திய அரசியல் சதுரங்கத்தில்

# ராஜாவுக்கு குறி வைக்கும் அர்ஜுன்சிங்

கோஷ்டிப் பூசல்கள் மலிந்து விட்ட ஒரு களமாக தோற்றமளிக்கும் காங்கிரஸ்- புதிதாக உத்வேகம் பெறும் தலைமைத்துவபிரச்சினையையும் இன்று தனக்கு சேர்த்துக் கொண்டுள்ளது.

அரசியல் கவர்ச்சியற்ற பலமான ஆதரவு தளமற்ற தலைவர்களினால் உறுதியான தலைமைத்துவத்தை எவ்வளவு காலத்துக்கு தரமுடியும் என்ற வினாவுக்கு நரசிம்மராவ் இன்று எதிர்நோக்கும் நெருக்கடிகள் தகுந்த பதிலாக அமைகின்றன.

பிரதமராக பதவி ஏற்ற காலம் தொட்டு - நரசிம்மராவின் கட்சித் தலைமைத்துவத்திற்கும் பிரதமர் பதவிக்கும் விடுக்கப்பட்ட பலமுனைச் சவால்கள் கடந்த காலங்களில் ஓரளவு தணிந்து தற்போது புதிய வடிவத்தைப் பெற்றிருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

ராஜீவ் காந்தியின் மரணத்துக்குப் பின் காங்கிரசின் தலைமையை பொறுப்பேற்க பல வட இந்தியத் தலைவர்கள் முண்டியடித்தபோதும்- சிரேஷ்ட அரசியல்வாதி என்ற முறையிலும் அன்றைய நிலையில் பெரியளவில் கோஷ்டி பூசல்களில் சம்பந்தப்படாதவர் என்ற வகை



யிலும் நரசிம்மராவ் பெற்றுக் கொண்ட வாய்ப்பே அவருக்குஅரசியல் எதிரிகளை உருவாக்கித் தந்தது.

ராஜீவ் காந்தியின் மரணத்தை தொடர்ந்து மீண்டும் ஓர் வாரிசு அரசியலை சோனியா காந்தி மூலம் ஏற்படுத்த முயசிற் மேற்கொண்டவர்களுக்கு ராவின் நியமனம் ஆரம்பகாலம் தொட்டே கசப்பாக இருந்து வந்திருக்கிறது.

இந்தவகையில் மத்தியப்பிரதேசத்திலிருந்து அர்ஜுன்சிங்கும், மகாராஷ்டிரத்திலிருந்து சரத்பவாரும், மறுபுறத்தில் ராஜீவ் விசுவாசிகளான சோனியா ஆதரவாளர்களுமாக நரசிம்மராவ் மூன்று முனைகளிலிருந்து தாக்குதல்களை எதிர்நோக்கினார்.

இவர்களில் முக்கிய எதிர்ப்பாளராக விளங்கி வந்த சரத்பவாரை மத்தியிலிருந்து மாநில அரசியலுக்குஅனுப்பி- தனது எதிர்த்தரப்புக் குறிகளில் ஒன்றை முறியடித்தார் நரசிம்மராவ். மாநில அரசியலில் சரத்பவாருக்கிருந்த பிரச்சினைகளில் ராவ் எதிர்ப்புக்கு தலைமை தாங்குவதென்பது பவாரால். முடியாத காரியம் என்ற கட்டத்தை- நரசிம்மராவ் தனது திட்டமிட்ட காய்நகர்த்தல் மூலம் மேற்கொண்டார்.

மறுபுறம் - ராஜீவ் விசுவாசிகளுக்கு கட்சியிலும் அரசாங்கத்திலும் பிரதான - முக்கிய பொறுப்புக்கள் போய்விடாமல் மிக அவதானமாக நடந்து கொண்டார் ராவ். சோனியாகாந்தி அரசியலில் பிரவேசிப்பதற்கு கொண்டிருந்த தயக்கம்-நரசிம்மராவை பொறுத்தவரை நல்ல சகுனமாகவே தொடர்ந்து கொண்டிருந்தது.

இந்நிலையில் அர்ஜுன் சிங் தனியே ஒரு எதிர்ப்பாளராக தொடர்ந்தும் ராவுக்கு நெருக்கடி கொடுத்து வருபவராகவே இருக்கின்றார், இருந்தும் வருகின்றார். தனது கபினட் வட்டத்தில் மனிதவள அபிவிருத்தி என்ற அதிமுக்கியத்துவம் இல்லாத அமைச்சுக்கு அர்ஜுன் சிங்கைபொறுப்பேற்கவைத்தும்- அர்ஜுன்சிங்கிக்கு எதிரான சக்திகளை தட்டிக்கொடுத்து வளர்த்தும் -பல தடைக் கற்களை தனக்கு சாதகமான வகையில் ராவ் அமைத்து வந்தாலும் -அரசியல் ரீதியாக ராவுக்கு தொடர்ந்து வரும் சிக்கல்களும்-தோல்விகளும்அர்ஜுன் சிங்கை பலப்படுத்தியே வந்துள்ளன.

நரசிம்மராவுக்கு பின்னர் என்ற நிலை வரும்போது தனது பெயர் முதலிடத்தில் உள்ளதை உணர்ந்து - தனது எதிர்ப்பினை வெளிப்படையாக காட்டிக் கொள்ளாதவராகவே அர்ஜுன் சிங் இதுவரை இருந்து வந்துள்ளார்.



எனினும் கட்சி மகாநாடுகளிலும்- பத்திரிகைப் பேட்டிகளிலும் நரசிம்மராவை பற்றி மறைமுகமாக தாக்குவதை அவர் தொடர்ந்து கொண்டு தான் இருந்தார். கடந்த ஆண்டு செப்டம்பரில் கூட பிரபல இந்தியப் பத்திரிகையாளரான இந்தர்ஜித் பத்வாரிடம்-''காங்கிரசிற்கு மக்களைஈர்க்கக்கூடிய தலைமை இல்லை இதை நான் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதில்லை'' எனக் குறிப்பிட்டமையானது பெரிய சர்ச்சை ஒன்றையும்தோற்றுவித்திருந்தது.

இதனைவிட சூரத்குண்டில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டிலும்-''ஒருவருக்கு ஒரு பதவி''என்றநிலைப்பாட்டையும் அர்ஜுன் சிங்வலியுறுத்தினார். இதன் மூலம்-பிரதமர் பதவியையும்-கட்சித்தலைவர் பதவியையும் தனித்தே நரசிம்மராவ் வகிக்கமுடியாது என்ற கருத்தையும்அர்ஜுன் சிங் கட்சிக்குள் உருவாக்கினார்.

நரசிம்மராவுக்கு என நிரந்தரமான ஆதரவுத் தளம் ஒன்று இல்லாத நிலையில் அர்ஜுன் சிங்கின் நடவடிக்கைகள் -ராவை பெரும் நெருக்கடிக்கே உள்ளாக்கின.

அர்ஜுன் சிங்கின் சொந்த மாநிலமான மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் கட்சியே ஆட்சியிலிருப்பதும் அவருக்கு சாதகமான அம்சமாக காணப்படுகின்றது. - மாநிலத்தில் தனக்கேயுரித்தான பலமான அத்திவாரம் ஒன்றை கட்டியெழுப்பவும் இவ்விடயம் அவருக்கு பலனைத்தரலாம் என்று கருதப்படுகின்றது. இந்நிலையில் கட்சிக்குள் ராவை எதிர்ப்பதற்கு தனித்து நின்று செயலாற்ற முடியாதவராக அர்ஜுன்சிங் இருப்பது அவரது மிகப் பெரிய பலவீனமாக காணப்படுகின்றது. முதலில் தனது நடவடிக்கைகளுக்கு சரத்பவாரை கூட்டுச்சேர்த்த அர்ஜுன் சிங்-பின் தற்போது எழுந்துள்ள நெருக்கடிக்கு சோனியாவை பின் தளமாக பயன்படுத்த முயற்சி எடுப்பதும் குறிப்பிடத் தக்கது.

தன்னோடு சேர்ந்து செயற்படுபவர்களை இடைநடுவில் கைவிட்டு எதிரியோடு சமரசம் காண்பவர் என்ற குற்றச்சாட்டும் அர்ஜுன் சிங்கின் மேலிருப்பதும் கவனிக்கத்தக்கது.

மத்தியப் பிரதேசத்தில் குழந்தைகள் நல பரிசுச்சீட்டு மோசடியிலும் அர்ஜுன்சிங் சம்பந்தப்பட்டிருப்பதும் அவரது ஆதரவுத் தளத்தை பலவீனப் படுத்தும் ஒரு அம்சமாகும்.

ரகுராம்

இத்தகைய பின்னடைவுகளுக்கு மத்தியிலும் அர்ஜுன் சிங் - அண்மையில் செய்து கொண்ட ராஜினாமா ராவை நெருக்கடிக்கு உள்ளாக்கியிருக்கிறது என்றால்அது அர்ஜுன் சிங் செல்வாக்கினால் ஏற்பட்ட பாதிப்பா அல்லது நரசிம்மராவின் தனிப்பட்ட முறையிலான வீழ்ச்சியா என்பது விவாதத்துக்குரிய ஒன்றாகவே இருந்து வருகின்றது- (6-ம் பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# தமிழீழப் பொதுக் கல்வித்தேர்வு - '94

## கணிதத்தில் முதல் மாணவன்



செந்தூரன்

'புலமைப்பரிசில் பரீட்சையில் தேறாதபோது ஏற்பட்ட மன விரக்தியைத் தொடர்ந்து நான் எடுத்துக்கொண்ட சபதமும் தேசியத் தலைவரின் பரிசு பெற வேண்டும் என்ற இலட்சியமுமே கணிதபாடத்தில் அதிகூடிய புள்ளியை தேசிய மட்டத்தில் பெற வழிசமைத்துத்தந்தது' என்கிறார். யாழ் இந்துக்கல்லூரி மாணவனான சிவசோதி செந்தூரன்.

விடுதலைப் புலிகளின் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நடாத்தப்பட்ட தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வில் கணித பாடத்தில் தேசிய மட்டத்தில்99 புள்ளிகளைப் பெற்றதன் மூலம் முதலிடத்தையும் தேசிய மட்டத்தில் ஆறாவது இடத்தையும் தட்டிக்கொண்ட செந்தூரனை அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

ஆரம்பக்கல்வியை மட்டுவில் சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயத்தில் பயின்றேன். ஆண்டு ஐந்தில் நடந்த புலமைப் பரிசில் பரீட்சையில் எதிர்பாராத விதமாக சித்தி பெறவில்லை. இதனால் மனநிலை பாதிப்படைந்தது. இருந்தும் யாழ் இந்துக் கல்லூரியில் ஆண்டு ஆறில் அனுமதிப்பதற்காகநடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில்தேறினேன்.

அதிகூடிய புள்ளிகளைப்பெற்ற முதல் நாற்பது மாணவர்களை தேர்ந்தெடுத்து 'ஏ' பிரிவில் அனுமதித்தனர். இதன்போது நானும் அந்தப் பிரிவிற்குள் அகப்பட்டுக் கொண்டேன். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களைக் கொண்ட வகுப்பாக அமைந்து விட்டதால் கடும்போட்டி நிலவியது.

புலமைப்பரிசில் பரீட்சையில் கணித பாடத்தில் கிடைத்த பின்னடைவை அடுத்துமனதில் எழுந்த வைராக்கியத்தால் அதில் கூடுதலான கவனம் செலுத்தினேன். ஆண்டு ஒன்பது வரை வகுப்பில் பத்தாவது இடத்திலிருந்து முன்னேற முடியவில்லை. அதனால் முன்னேறிவிட வேண்டும் என்ற ஒரே நோக்குடன் விடாது முயன்றேன். ஆண்டு பத்தில் மூன்றாவது இடத்திற்கு முன்னேறி விட்டேன். ஆண்டுபத்தில்கற்கும்போதேதேசிய மட்டத்தில் முதல் பத்து இடங்களிற்குள் நானும் ஒருவனாகி தேசியத் தலைவரின் பரிசினை பெற்று விட வேண்டும் என்பதில் தீவிர ஆர்வம் கொண்டிருந்தேன்.

எனது வீட்டிலிருந்து தினமும் பதினாறு மைல்தூரம் சைக்கிள் ஓடியே பாடசாலைக்கு சென்று வரவேண்டியிருந்தது. இதனால் இரவிலோ, பகலிலோ கல்விகற்கக் கூடிய வாய்ப்பு இருக்கவில்லை. எனினும் கற்றவற்றை மீட்பதற்கு பாடசாலையில் கிடைக்கும் ஓய்வு நேரங்களை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்வேன். பாடசாலை முடிந்ததும் தனியார் கல்வி நிறுவனத்திற்குச் செல்வதற்கிடையில் இருமணிநேர இடைவெளி இருக்கும். அந்தநேரத்தில் வீட்டுவேலைகளை (HOME WORK) செய்து முடித்து விடுவேன்.

> "விடுதலைப் போராட்ட உச்சக் கட்டத்தின் மத்தியிலும் தமிழீழ மாணவர்களின் கல்வி அழிந்துவிடக் கூடாது என்பதற்காக 'தமிழீழக்கல்விக்கழகத்தினை' உருவாக்கி கல்வியை வளர்த்திட தேசியத் தலைவர் எடுத்த முயற்சிகளை கல்விச் சமூகம் என்றுமே மறந்திட முடியாது"

வகுப்பில் உள்ளவர்கள் யாவரும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதை ஒவ்வொரு பரீட்சையிலும் நிரூபிப்போம். கணிதத்தில் 95 முதல் 100 புள்ளிகளுக்கிடையில் சகலரும் பெறுவோம். குறைந்தது பத்து பேர் வரையில் 100 புள்ளிகளை பெறுவார்கள். ஏனைய பாடங்களிலும் இதுபோலவே போட்டியிருக்கும். போட்டி இருந்தாலே எதிலும் முன்னேறமுடியும் என்பதற்கு எமது வகுப்பு நல்லதொரு எடுத்துக்காட்டாகவுள்ளது.

பாடசாலையில் தவராஜா ஆசிரியர் கணிதபாடத்தில் மிகவும் ஊக்கமளித்தார். ஏனைய பாடசாலைகளில் நடக்கும் பரீட்சை வினாத்தாள்களிலிருந்து வித்தியாசமான, கடினமான கணக்குகளை திரட்டித்தருவார். நாமும் போட்டி போட்டு செய்து முடிப்போம். இதேபோலவே தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் வேலாயுதத்தையும் மறக்கமுடியாது, அவரும் ஒவ்வொரு அலகினையும் பூர்த்தி செய்தவுடன் அதில் அச்சடித்த குறிப்புகளாக நூறுவரையான கணக்குகளைத் தருவார், இவை எமக்கு கணிதத்தில் ஓர் ஆர்வத்தை தந்ததுடன் நிறைவையும் தந்தது. தனித்து கணிதத்தில் மட்டும் கவனம் செலுத்தவில்லை, ஏனைய பாடங்களுக்கு செலவிடும் நேரத்தைவிட இதற்கு கூடுதலான நேரம் தேவைப்பட்டது, இம்முறை தேர்வில் ஏழு பாடங்களில் அதி விசேட சித்தியும் ஒன்றில் சிறப்புச் சித்தியும் (7D, C) கிடைத்தது,

பொதுக்கல்வித் தேர்வு பெறுபேற்றில் தமிழ்ப் பாடத்திற்கான முடிவு எனக்கு மட்டுமல்ல பாடசாலை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமே பெரும் அதிர்ச்சியைத்தந்துள்ளது ஆங்கில இலக்கியத்தில் கூட அதி விசேட சித்தியை பெற முடிந்த எம்மால் தமிழில் பெற முடியாது போய் விட்டது.

தமிழில் எந்தப்பகுதியில் எமக்கு புள்ளிகள் கிடைக்காதுபோனது என்பதை ஊகித்துக் கொள்ள முடியாதுள்ளதால் அதனை அறிந்து கொள்வதில் மிகவும் விருப்புடையவனாக இருக்கிறேன் விட்ட தவறை தெரிந்து கொண்டாலே எதிர்காலத்தில் என்னை வளர்த்துக்கொள்ள முடியும் என எண்ணுகிறேன்.

கணிதத்தைபொறுத்தவரையில் ஒரு புள்ளியை எந்த பகுதியில்இழந்தேன் என தெரியாதுள்ளது. சகல கணக்குகளும் திருப்திகரமாகவே செய்துமுடித்தேன்.

கணிதபாடம்கடினமானதுஎன மற்றவர்கள் கூறுவது வேடிக்கையானது, மற்றைய பாடங்களைப் போல் அல்லாது முன் கூட்டியே விளக்களை தெரிந்து கொள்கிறோம் அதனை திரும்பதிரும்ப செய்து பயிற்சி எடுப்பதில்லை மாணவர்களின் அசட்டையீனமே கணித பெறுபேறு குறைவிற்கு காரணம் என ஆணித்தரமாக

(6ம் பக்கம் பார்க்க,

சந்திப்பு: சசிகரன்

## விஞ்ஞானத்தில் முதல் மாணவன்



சுதர்சன்

விஞ்ஞான பாடத்தில் தேசியரீதியாக முதன்மை புள்ளி கிடைக்குமென நான் எதிர்பார்க்கவில்லை ஆங்கில பாடத்தில் மட்டும் அதிவிசேட சித்தி கிடைக்குமென மட்டுமே எதிர்பார்த்தேன் என்றார் தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் விஞ்ஞான பாடத்தில் அதிவிசேட சிததி பெற்று அதி கூடிய புள்ளியைபெற்ற ஹாட்லிக்கல்லூரி மாணவன் சிவராசா சுதர்சன்-

தமிழீழ பொதுக்கல்வித்தேர்வில் விஞ்ஞான பாடத்தில் அதிகூடிய புள்ளியை பெற்றதன் மூலம் விஞ்ஞானபாடத்தில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்ற மாணவன் என்ற வகையில் அவரை சந்தித்து எமது வெள்ளி மஞ்சரிக்காக உரையாடினோம்-

இதன்போது அவர் தன்னைப் பற்றி தெரிவிக்கையில்; ஐந்தாம் ஆண்டுபுலமைப்பரிசில் பரீட்சையில் நான் சித்திபெறவில்லை- 1989-ம் ஆண்டு ஹாட்லிக் கல்லூரியில் சேர்ந்து ஆண்டு ஆறு தொடக்கம் கல்வி கற்று வருகிறேன்-

கணித பாடத்தில் முதலில் அவ்வளவாக புள்ளிகள் கிடைப்பதில்லை- அதனாலேயே புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற முடியவில்லை ஆனால் பின்னர் படிக்க படிக்க அதுதானாகவே இலகுவான பாடமாக எனக்கு வந்துவிட்டது- அண்மையில் நடந்த பொதுக்கல்வி தேர்வில் எனக்கு அதிவிசேட சித்தி கிடைத்ததுடன் 94 புள்ளிகளும் கிடைத்துள்ளன.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையவில்லையென கவலை எனக்கும் ஏற்பட்டதுதான். ஆனால் இன்று தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் ஐந்து பாடங்களில் அதிவிசேட சித்தியும் 3 பாடங்களில் திறமைச்சித்தியும் பெற்றது மட்டுமல்லாது விஞ்ஞானத்தில் தேசிய மட்டத்தில் அதிகூடிய புள்ளி கிடைத்ததன் மூலம் புலமைப் பரிசில் பரீட்சையில் தேறியவர்கள் மட்டும் தான் படிக்கக் கூடியவர்கள் என்றில்லை. அதில் சித்தியடையா விட்டாலும் முயற்சியிருந்தால் ஏனைய உயர்வகுப்புகளிலும்அதிவிசேட சித்தியுடன்சிறந்தபெறுபேற்றை பெற முடியும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது. படிப்பை பொறுத்தமட்டில் அம்மாதான் ஊக்கப்படுத்துவார். அப்பா சொல்வார் யாரையும் யாரும் படி என்று வற்புறுத்தவோ திணிக்கவோ கூடாது. தானாக உணர்ந்து படிப்பதேபடிப்பு என்று. என்னைப பொறுத்தவரையும் நான் படிப்பது பரீட்சைக்கு ஒரு வாரத்திக்கு முன்புதான் சமூகக்கல்வியே கூடுதலான நேரம் படிக்க வேண்டியிருக்கும் மற்றைய பாடங்கள் பாடசாலையிலும், தனியார் கல்வி நிலையங்களிலும் படித்ததை வைத்தே பரீட்சை எழுதினேன்.

தமிழீழ பொதுக் கல்வித்தேர்வு முதலில் நடாத்தப்படுவதால் இறுதிப் பரீட்சைக்கு முன்னரே எங்களை தயார் படுத்தக் கூடியதாக உள்ளது இதேவேளை பொதுக் கல்வித் தேர்வில் சித்தி அடைவோருக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுவதுடன் தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசில்களும் வழங்கப்படுவதால் மாணவர்கள் தமிழீழ பொதுக் கல்வித்தேர்விற்கு தம்மை பெரியளவில் தயார்படுத்துகிறார்கள்.

> "புலமைப் பரிசில் பரீட்சையில் பின்னடைவுகளைச் சந்தித்தாலும் மனம் தளராது முயற்சிப்பின் மேல் வகுப்புகளில் விசேட சித்திகளுடன் சிறந்த பெறுபேறுகளைப் பெறமுடியும் என்பதை உணருகின்றேன்"

உங்களுக்கும் தேசியத் தலைவரின் பரிசுகிடைத்துள்ளதே என்று கேட்டபோது, எனக்கு மிகவும் சந்தோசமாக இருக்கிறது. இது நான் எதிர்பார்க்காத ஒன்று. ஏனெனில் நான் முதலில்உங்களுக்கு கூறினேன் ஆங்கில பாடத்தில் தான் அதிவிசேட சித்தி கிடைக்குமென எதிர்பார்த்தேன் என்று. ஆனால் விஞ்ஞான பாடத்தில் அதி கூடியபுள்ளி கிடைத்து அதற்காக தேசியத் தலைவரின் பரிசு பெறும் வாய்ப்புக் கிடைக்குமென நான் எதிர்பார்க்கவில்லை. எதிர்பாராத ஒன்று அதுவும் தேசியத் தலைவரின் பரிசும் கிடைப்பதென்பது மகிழ்ச்சிக்குரியதே என்றார்.

விஞ்ஞான பாடத்தில் தமிழீழ பொதுக்கல்வித் தேர்வில் 94 புள்ளிகள் கிடைத்தன. பாடசாலை இறுதித்தவணை பரீட்சையிலும் 94 புள்ளிகளே கிடைத்தன. விஞ்ஞானத்துறையில் மேற்படிப்பை தொடர வேண்டுமென்பதே எனது விருப்பமாக ஆரம்பம் முதல் இருந்து வருகிறது. அதேவேளை இப்பரீட்சை முடிவும் விஞ்ஞானத்துறையில் எனது ஆர்வத்தை மேலும் தூண்டியுள்ளது. எனவே எனது விருப்பம் போல் உயர்கல்வியை விஞ்ஞான துறையிலேயே தொடர உள்ளேன்.

பாடசாலையில் உங்களுக்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் பட்டதாரி ஆசிரியர்களும் கல்வி கற்பிக்கும் போது ஏன் தனியார் கல்வி நிலையங்களை நாடுகின்றீர்கள் என கேட்டபோது.

எல்லோரும் தனியார் கல்வி நிலையங்களுக்கு போகிறார்கள் என்பதால் நானும் அங்கு போனேன். அது ஏன் என்பது எனக்கு தெரியவில்லை. இருந்தும் பாடசாலையில் கற்பதைவிட தனியார் கல்வி நிலையங்களில் கற்பதிலேயே ஆர்வமாக இருந்தது. பாடசாலையிலும் பின்னர் தனியார் கல்வி நிலையத்திலும் கற்பதால் வீட்டில் படிக்க வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படவில்லை. தனியார் கல்விநிலையத்தில் இருந்து வந்தவுடன் சாப்பிட்டு விட்டு நித்திரைக்கு சென்று விடுவேன்.

மற்றமாணவர்கள் எப்படியோ எனக்கு தெரியாது.என்னை பொறுத்தவரை நான் படிக்கவேண்டும் என்று நினைத்து படிக்கும் போது யாரும் குழப்பினால் தொடர்ந்து படிக்கமுடியாமல் படுத்துவிடுவேன். படிக்கவேண்டுமென்று எனக்கு தோன்றினால் படிப்பேன். மற்றும் படி நித்திரை செய்வதே எனக்கு விருப்பமானதும் நான் செய்வதும் என்றார் சுதர்சன்.

பேட்டி: சிவகுணபாலன்

இரவிலோ, பகலிலோ கல்விகற்கக் சந்திப்பு: சசிகரன் (6ம் பக்கம் பார்க்க) உணர்ந்து படிப்பதேபடிப்பு என்று. என்னைப் பொறுத்தவரையும் பேட்டி: சிவகுணபாலன் விருப்பமானதும் நான் செய்வதும் என்றார் சுதர்சன்.

# சந்திரிகா அரசைத் திணறடிக்கும் ஐ. தே. க. விட்டுச் சென்ற பிரச்சினைகள்

சந்திரிகா அரசாங்கமானது இன்று திசை தெரியாத ஓர் இலக்கை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. மக்கள் எந்த நோக்கத்திற்காக வாக்களித்து இவ் அரசாங்கத்தை ஆட்சியில் அமர்த்தினார்களோ இன்று அந்த நோக்கை நோக்கி ஓர் இம்மியளவும் தனது பயணத்தை செலுத்த முடியாத நிலையில் அரசாங்கம் நின்று தள்ளாடுகின்றது.

சந்திரிகா தனது பாராளுமன்ற அதிகாரத்தை கைப்பற்றி 136 நாட்கள் சென்றுள்ளது. இதேவேளை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவி யேற்று 47 நாட்கள் சென்ற நிலையில் திசை தெரியாத மாலுமி போல் சந்திரிகா சிக்குண்டு தவிர்ப்பது எதிர் காலத்தில் இவரின் ஆட்சியை கேள்விக் குறியாக மாற்றியுள்ளது.

ஒரு நல்ல ஆரம்பத்தையோ அன்றி நல்ல சகுனத்தையோ வெளியிட முடியாத நிலையில் தனது அடுத்த கட்டத்தை ஆரம்பிக்க முடியாத நிலையில் நின்ற இடத்திலே நின்று தவிப்பதாகவே இவரது ஆட்சிதெரிகின்றது. இதற்கு நீண்ட கால ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியில் நடந்த ஊழல்கள், வீண் விரயங்கள் என்பவை தான் காரணம் என சுட்டிகாட்டிய போதும், ஐ. தே. க. ஆட்சியில் இறுதிப் பகுதியில் அறிவிக்கப்பட்ட கண்மூடித்தனமான சம்பள அதிகரிப்புக்களும் அவற்றை இன்று நிறைவேற்ற முடியாததனால் ஏற்பட்டுள்ள வேலை நிறுத்தங்களும் கூட அரசாங்கத்தை உலுப்பிக் கொண்டு இருக்கின்றது. கூடிய சம்பளம் மற்றும் ஏனைய சலுகைகள் தொடர்பாக நடைபெறும் வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் விரிவடைந்து செல்கின்றன.

அரசாங்கம் இதன் அடிப்படைகளை உணர்ந்து தீர்க்காமல் எங்கெங்கு வேலை நிறுத்தம் ஏற்படுகின்றதோ அதனை மட்டும் தீர்ப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. இதனால் வேலை நிறுத்தம் செய்தால் மட்டுமே தமது சலுகைகளை பெற்றுக் கொள்ள முடியும் என்ற நிலை தொழிலாளர் மத்தியில் தோன்றியுள்ளதால் தொழிலாளர்தற்போது தமது வேலைநிறுத்த போராட்டத்தை உடனடியாக ஆரம்பித்து தமது சலுகைகளை பெற்று கொள்ளுகின்றார்கள் என அவதானிகள் தெரிவிக்கின்றனர். இதேவேளை சுதந்திர வர்த்தக வலயத்திலும் பல கோணங்களில்இப் பிரச்சினைபூதாகாரமாக உருவெடுத்ததினால் பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமது உற்பத்திகளை முடக்கி கொண்டு நாட்டைவிட்டு வெளியேறத் திட்டமிட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

மறுபுறம் பல்கலைக் கழக மாணவர்களின் விடுதிப்பிரச்சினை ஐ. தே. க ஆட்சியில் ஏற்பட்டு அவைஒத்திப்போடப்பட்டு இன்று பெரும் வடிவம் எடுத்துள்ளது. எனவே உடனடியாகவே இதற்கு ஓர் தீர்வை முன்வைக்க வேண்டிய நிலையும் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தில் எண்ணிக்கையற்று செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் - சந்திரிகா அரசாங்கத்துக்கு தொடர்ந்தும் பல வகையிலும் நெருக்குதல்களைத் தரத் தொடங்கியுள்ளன. ஒப்பந்தங்கள் என்ற பெயரில் செய்து கொள்ளப்பட்ட ஊழல்களும் மோசடிகளும் விளைவித்துள்ள பாதகமான நிலையை எளிதில் அகற்ற முடியாதவராகவே சந்திரிகாகாணப்படுகின்றார்.

இரத்து செய்ய முடியாத ஒப்பந்தங்கள் தொடர்ந்தும் அவற்றை விரும்பியோ விரும்பாமலோநடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாய நிலைக்கு சந்திரிகாவை கொண்டு சென்றுள்ளது இவ் வகையில் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியின் பாதிப்பு ஒப்பந்தங்கள் என்ற வகையில் புதிய அரசுக்கு தொடர்ந்து நெருக்கடிகளை விதைத்துக் கொண்டிருப்பது கண்கூடாகும்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி எடுத்துவரும் புனரமைப்பு நடவடிக்கைகளும் புதிய அரசாங்கத்தின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் அவதானிக்கும்நோக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை சங்கடப்படுத்தவேசெய்யும்என்பதும் வெளிப்படையானது.

முன்னாள் முதலாவதுநிறைவேற்று அதிகாரங் கொண்ட ஜனாதிபதியின் அண்மைக் கால திடீர் கருத்து வெளியிடுதல் அவர் அரசியல் பிரவேசம் ஒன்றுக்கான முகூர்த்தத்தை ஆவலுடன் எதிர்பார்த்து இருப்பதே கோடிகாட்டுகின்றது. அரசியலில் தான் ஒதுங்கி இருப்பதாக வரிக்கு வரி தொவித்தவர் இன்று அரசியல் அமைப்பை மாற்றுவது தொடர்பாகவும் இதன் விளைவுகள் குறித்தும் தனது ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கு விரிவுரைகளை நடத்த ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர



அபேவர்தனாவின் அழைப்பை ஏற்று நடத்த முன்வந்தமை தனது அரசியல் ஆதிக்கத்தை மீளவும் அவர் வலியுறுத்த முற்படுவதாகவே கொள்ளமுடிகின்றது.

இதேவேளை இயன்றவகைகளில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசாங்கத்தை ஆட்சி பீடத்திலிருந்து அகற்றுவதற்கு அண்மையில் நடந்த ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச் சபைக் கூட்டம் தீர்மானம் எடுத்திருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

சென்ற ஆட்சிக் காலத்தில் ஊழல் புரிந்தவர்கள் என யார் நிருபிக்கப்பட்டாலும் அவர்களை கட்சியின் சகல பொறுப்புகளிலிருந்து விலக்கப்படுவார்கள் என்ற ஐ தே. க. தலைமைப் பீடத்தின் அறிவித்தல் மக்களுக்கு தாங்கள் சுய சுத்தம் செய்யப்படுகின்றோம் என்ற தொனியில்விடுக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றி பாராளுமன்ற ஆட்சி முறையை சந்திரிகா குமாரதுங்கா அறிவிக்கும் போது அந்த இடத்தில் ஐ தே. க. மிகப் பெரும் அரசியல் காய் நகர்த்தலை மேற் கொள்ள திட்டமிட்டு வருவதாக கிடைத்துள்ள தகவல்கள் தெரிவிக்கின்றது. இது நிச்சயமாக சந்திரிகாவிற்கு மகிழ்ச்சியைத்தருவதாக இருக்காது என்பது திண்ணம்.

பாராளுமன்ற ஆட்சி அதிகாரத்தை சந்திரிகா வலுப்படுத்துவதற்கு ஏனைய கட்சிகளின் உறவை இறுக்கமாக்க வேண்டிய நிலை அவருக்கு இருக்கலாம். இக் கட்சிகளை பொது ஜன ஐக்கிய முன்னணியின் உறவில் இருந்து பிரிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீவிரமாக முயன்று வருகின்றது.

பாராளுமன்றத்தில் ஐ. தே. கவை வெளிப்படையாக ஆதரிக்காத போதும் நடு நிலைமையையாவது கடைப்பிடிக்குமாறு ஐ தே. க. இக் கட்சிகளை கேட்டுக் கொள்ள விநப்பதாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி தனது இஷ்டப்படி தான் பதவியேற்று ஒரு வருட காலத்திற்கு பாராளுமன்றத்தை கலைக்க முடியாது என்ற நிலையில் ஐ தே க தனது முயற்சிகளில் தீவிரமாக இறங்கியிருப்பதாக தெரிய வருகின்றது.

## நிமலராஜன்

இச் சிக்கலை நிவர்த்தி செய்வதற்கு அரசியலமைப்பு மாற்றத்தின் மூலம் - புதிய பாராளுமன்ற தேர்தலை நடாத்துவதற்கு சந்திரிகா முயலலாம் எனவும் கூறப்படுகிறது ஆனால் இது சாத்தியப்படும் வாய்ப்பை பொறுத்தே அவருக்குள்ள நெருக்கடி நீங்குவது பற்றி சிந்திக்க முடியும்.

இவ்வாறாக - சந்திரிகா தனது பெரும் பான்மை பலத்தை வலிமைப்படுத்த எடுக்கும் முயற்சிகள் ஏனைய கட்சிகளுக்கு சந்தோஷத்தை தரும் விடயமாக இருக்காது என்பது நிச்சயம்.

ஏனெனில் சந்திரிகா தனது பெரும்பான்மை பலத்தை பெறும் நிலையில் ஏனைய கட்சிகளின் முக்கியத்துவம் வாய்ந்த ஆதரவு என்பது புறந்தள்ளப்படும் ஒரு சூழ்நிலையும் ஏற்பட இடமுண்டு இவ்வாறான நிலைமைகள் ஏற்படலாம் என ஏனைய கட்சிகளுக்கு வலியுறுத்துவதன் மூலம் தனக்கு ஓர் சாதகமான நிலைப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள ஐ. தே. க. முயன்று வருகிறது.

இதனை விட இன்று பல்கிப் பெருகும் வேலை நிறுத்தங்களுக்குபின்னணியில் ஐ தே.க இருப்பதும் அதனூடாக பொதுமக்களின் வெறுப்புணர்வை அரசாங்கத்தின் மேல் திருப்ப முயல்வதும் கவனிக்கத் தக்க விடயங்களாகும்.

ஒட்டு மொத்த நோக்கில் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு ஏற்பட்டுள்ள பாதகமான விடயங்களை ஐ தே. க. தன் இலாப கணக்கில் சேர்த்துவருவதும் இது பெருக்கல் ரூபத்தை எடுத்தல் கூட ஆச்சரியப் படுவதற்கு இல்லை என்ற நிலையே தோன்றுகிறது.

## தமிழீழ சட்ட நூல்களை பெற்றுக் கொள்ளும் இடம்

நீதி நிர்வாகத்துறையினரால் வெளியிடப்பட்ட தமிழீழ ஒறுப்புச் (தண்டனை) சட்டம் மற்றும் இதர சட்ட நூல்களையும்

தமிழ்த்தாய் பொத்தக சாலையிலும்
பூபாலசிங்கம் பொத்தக சாலையிலும்

பெற்றுக்கொள்ளலாம்.

(ஏ-11032)


## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
06. 04. 1924

மறைவு:
09. 01. 1994

திதி: 30. 12 1994

### கதிரிப்பிள்ளை கனகசபை
(சூரிய பவான் உரிமையாளர் யாழ்ப்பாணம்)

குடும்பத்தின் ஒளி விளக்கே
உழைப்பால் உயர்ந்த உத்தமரே
ஊரார் போற்ற வாழ்ந்த தெய்வமே
ஓராண்டும் ஓடி மறைந்ததய்யா
உணர்விழந்து வாடுகிறோம்
பாசமுடன் எங்கள் பாதுகாவலனாக
இருந்தீர்கள் பரிதவிக்க விட்டதென்ன
வழி நடத்த யாருமில்லை கண்கள்கலங்குதய்யா
பல ஆண்டுகள் சென்றாலும் உங்கள்
நினைவு எம்மை விட்டகலாது.

உங்கள் ஆத்மா சாந்தி வேண்டி
இறைவனை வேண்டி நிற்கும்,

விழிசிட்டி தெற்கு, சுன்னாகம். — மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(10528)

## 5-ம் ஆண்டு நினைவாக



## அல்ஜீரிய

பிரான்சு சம்பந்தப்பட்டு விட்டது. அல்ஜீரிய அரசை எவ்வாறேனும் காப்பாற்ற வேண்டும் என்பதில் பிரான்ஸ் காட்டும் தீவிரம் இப்போது புதிய நெருக்கடியொன்றையே அங்கு ஏற்படுத்தி விட்டது. இன்று பிரான்சில் தகுந்த பொருண்மிய மேம்பாடு இன்றி நகர்ப்புறங்களில் வாழும் 50 லட்சம் இசுலாமியரில் பெரும்பாலோர் இசுலாமிய அடிப்படைவாத அமைப்புகட்கு ஆதரவானவர் என பிரான்சுசந்தேகிக்கின்றது. குறிப்பாக இரண்டாவது தலைமுறை தமது சொந்த அடையாளங்களைத் தேடி இசுலாமிய வாதத்தை சார்வதாக கருதப்படுகின்றது. இப்போதுபிரான்சிய பொலிசார் இத்தகைய புறநகர்ப்பகுதிகளிலே அடிக்கடிதேடுதல்நடத்தி இவர்களில் பலரை கைது செய்கின்றனர்.

அண்மையில் GIA அமைப்பிற்கு அனுப்பப்படவிருந்த பெருமளவு ஆயுதங்களைதாம் கண்டெடுத்ததாக இவர்கள் கூறுகின்றனர். இவைகாரணமாக முசுலிம்கட்கு எதிரான ஒருவகை இனவாதப் போக்கு பிரான்சில் வளர பிரான்சிய அரசே காரணமாக இருப்பதாக இப்போது பலரும் குற்றம் சாட்டுகின்றனர். பிரான்சிய சமூகம் தம்மை ஒதுக்குவதாக வேலைவாய்ப்புகளில் வேறுபாடு காட்டப்படுவதாக இம்முசுலிம்கள் கருதுகின்றனர். Giles Kepd எனும் அரசறிவியல் ஆய்வாளர் இதுபற்றி எழுதிய இரு நூல்களான இசுலாமின் புறநகரங்கள் [Islam's Suburbs) To the west of Allah என்கிற இருநூல்களிலுமே இத்தகையமக்களிடையே தீவிரஇசுலாமியவாதம் வளர்வதையும் ஏனைய சிறுபான்மை மக்களில் பலரும் மேற்கில் இசுலாமோடு தம்மை அடையாளம் காட்டி தற்காப்பு உணர்வு பெறுவதையும் விளக்குகின்றது.

எனவே அல்ஜீரியசிக்கல்என்பதுஇத்தகையபன்முகபண்பாட்டுச்சிக்கலின் ஒருவெளிப்பாடாகிவிட்டது. இசுலாமிய வாதத்தின் அடிப்படையில் இசுலாமிய தீர்வொன்றை முன்வைக்க முயலும் அல்ஜீரியப்போராட்டம் இசுலாமிய உலகிலே மதசார்பற்றவை எனக்கூறிக்கொள்ளும் மேற்குலகம் முண்டு கொடுக்கும் அரசுகளின் இயலாத் தன்மையை- இங்கெல்லாம் இடதுசாரி அமைப்புக்கள் இல்லாமற்போனதன் பின்னான வெற்றிடம் நிரப்பப்படும் வகையை விளக்குகின்றது. ஏற்றத்தாழ்வுகளும் ஏமாற்றுக்களும் இருக்கும் வரையில் ஏதோவகையில் முரண்பாடுகள் முற்றி போராட்டங்கள் வெடித்து அவை வரலாற்றை நகர்த்தும் விதிகளாகிவிடுகின்றன.

## கணிதத்தில்

கூறமுடியும்சில வேளைகளில் கவனயீனப்பிழைகளும் ஏற்படுவதுண்டு.

தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வினை வரவேற்கிறேன். சிறிலங்காஅரசு திட்டமிட்ட முறையில் எமது கல்வியை பாழடிக்க முனைந்த வேளை மாணவர் கல்வி என்றும் அழியக்கூடாது என்ற ஒரே குறிக்கோளுடன் எமது தேசியத் தலைவர் தமிழீழக் கல்விக் கழகத்தை ஆரம்பித்து அதனூடாக எமது கல்விக்கு வழிகாட்டி நிற்கிறார். முன்னைய காலங்களில் பரீட்சைநடக்குமா என்ற சந்தேகத்துடன் புத்தகத்தை புரட்ட வேண்டிய நிலையை மாற்றி திட்டமிட்ட படி பரீட்சைநடக்கும் என்ற உறுதியை மாணவர் மனதில் உருவாக்கிவிட்டுள்ளது இக்கல்விப் பேரவை.

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு நடத்தப்பட்டதும் நாம் அதன் முடிவிற்காக காத்திருந்தோம். சாதாரணதர பரீட்சை நடப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக இதன் பெறுபேறு வெளியிடப்படல் விரும்பத்தக்கதாகும். அப்படி வெளியிடப்பட்டால் நாம் எந்தப் பாடத்தில் குறைவாக இருக்கிறோம். எதில் கூடிய ஊக்கம் எடுக்க வேண்டும் என்பதை தெரிந்து கொள்ள இலகுவாக இருக்கும்.

உயர் கல்வியை கணிதத்துறையிலேயே மேற்கொள்ளவுள்ளேன், பரீட்சை முடிவு வெளியானதால் ஜனவரி முதலே அதனைத் தொடரலாம் என எண்ணியுள்ளேன் என்றார் செந்தூரன்.


## நினைவஞ்சலி

சாவகச்சேரி 30.12.93 கிட்டண்ணாவின் நினைவாலய திறப்பு விழாவின்போது விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகி மரணித்த எமது மன்ற தலைவர், மன்ற உறுப்பினர்கள் பொது மக்கள் பதினொருவரின் நினைவாக இன்று 30-12-94 பிற்பகல் 5.00 மணிக்கு கிட்டண்ணாவின் நினைவாலயத்திற்கு அருகில் நினைவுக்கல் திரைநீக்கமும் அஞ்சலிக் கூட்டமும் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சாவகச்சேரி
30-12-94 கைத்தொழில் வணிகர் மன்றம்

[10524]



### பட்டப்பின் கல்வித் தகைமை கற்கை நெறி 1993/94

பட்டப் பின் கல்வித் தகைமை கற்கை நெறிக்கான விரிவுரைகள், முழு நேர மாணவர்களுக்கு 1995.01.17 ஆம் திகதியும் பகுதி நேர மாணவர்களுக்கு 1995.01.21 ஆம் திகதியும் ஆரம்பமாகும்.

இக்கற்கை நெறிக்கு ''நிரந்தர பட்டதாரி ஆசிரியர்'' என்ற நியமனக் கடிதம் இன்றி, 1994.10.20 ஆம் திகதி நடை பெற்ற நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்த விண்ணப்பதாரிகளும், இவ் நியமனக் கடிதத்தைச் சமர்ப்பித்து 1995.01.10 ஆம் திகதிக்கு முன் கல்விக்கிளையில் பதிவு செய்யலாம். இதற்கான கடிதங்களும் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

பதிவாளர்
(ஏ-11035)


## இந்திய

ஆந்திர, கர்நாடக சட்ட சபைத் தேர்தல் உட்பட அண்மையில் நடந்த தென் மாநில சட்ட சபைத் தேர்தல்களில் காங்கிரஸ் கண்ட படு தோல்வி ஒருபுறம்.

உத்தரப் பிரதேசத்தில் முலாயம்சிங் அமைச்சரவைக்கு காங்கிரஸ் தொடர்ந்தும் ஆதரவளிப்பதால் உத்தரப் பிரதேச மாநில காங்கிரஸ் தலைவர் நாராயண்தத் திவாரியின் பலத்த எதிர்ப்பினை வெளிக்காட்டும் ராஜினாமா ஒருபுறம்.

ஜார்க்கண்ட் தனிமாநில கோரிக்கைக்கு ஆதரவளிப்பதால் பிஹாரில் எழுந்துள்ள நெருக்கடிகள் ஒருபுறம்-

பொருளாதாரக் கொள்கைகளின் அமுலாக்கத்தினால் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் ஒருபுறம்.

ஊழல் நடவடிக்கைகளில் அமைச்சரவையின் சிரேஷ்ட உறுப்பினர்களே குற்றவாளிகளாக இனங்காட்டப்படும் சூழ்நிலை ஒருபுறம்-

என நரசிம்மராவுக்கு தொடர்ந்துவரும் நெருக்கடிகள் அர்ஜுன்சிங்கிற்குசாதகமான சூழ்நிலையை தோற்றுவித்துள்ளன என்றே கூறப்படுகின்றது.

அதேவேளை அர்ஜுன்சிங் தனது ராஜினாமா கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சில விடயங்கள் நரசிம்மராவை நேரடியாக தாக்குவதாக காணப்படுவதை அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அயோத்தியில், பாபர் மசூதி இடிக்கப்பட்டதுதொடர்பாக அரசாங்கம்பகிரங்க மன்னிப்பு கேட்கவேண்டும் என்றும் - ராஜீவ்காந்தி கொலை வழக்கை விசாரித்த வர்மா கமிஷனின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தாததற்கு விளக்கம் தரவேண்டும் எனக் கோரியிருப்பதானது இரண்டு வகையில் அர்ஜுன்சிங் தனது ஆதரவு தளத்தை விரிவுபடுத்தவும் ராவை இக்குற்றச்சாட்டுக்கள் மூலம் நேரடியாக தாக்கவும் வழி செய்திருப்பதாக கூறப்படுகின்றது.

பாபர்மசூதி இடிக்கப்பட்டது தொடர்பாக அரசாங்கம் மன்னிப்புக்கோர வேண்டும் என்ற கருத்தின்படி சிறுபான்மை மக்களின் ஆதரவுத் தளத்தை தன்பக்கம் திருப்பவும்-

ராஜீவ் கொலை தொடர்பான விசாரணைகளில் அக்கறை காட்டுவதன் மூலம் தன்னை ஓர் ராஜீவ் விசுவாசியாக இனங்காட்டி சோனியாவினதும் ராஜீவ் ஆதரவாளர்களதும் ஆதரவுத் தளத்தை பெற்றுக் கொள்ளவும் அர்ஜுன்சிங்முயல்கிறார் என்பது வெளிப்படையானது.

ஆந்திர - கர்நாடக சட்ட சபைத் தேர்தல்களின் பின்னர் - சோனியாவுடனான அர்ஜுன் சிங்கின் சந்திப்பும் அதனைத் தொடர்ந்த அவரது ராஜினாமாவும் இ[illegible] உறுதியாக்குகின்றது.


இதோ தாக்குகிறேன் பேர் வழி என்று பொங்கி - பின் தணிந்து போகும் அர்ஜுன் சிங்கின் கடந்தகால செயற்பாடுகளுக்கும் - ஆழமான மௌனத்தில் தன் அனுபவம் வாய்ந்த காய்நகர்த்தல்களை மேற்கொள்ளும் நரசிம்மராவின் ராஜதந்திரத்திற்கும் இடையில் எழுந்துள்ள சச்சரவு - யார்பக்கம் சாதகமான விளைவைத் தரும் என்பது- தனியே காங்கிரசை மட்டுமல்லாது இந்திய அரசியலிலும் குறிப்பிடத்தக்கநிகழ்வாகவே இடம் பெறும் என்றே கூறலாம்.


கடந்த 20 ஆண்டுகளாக யாழ்நகரில் வெளிவாரிப் பட்டப் படிப்புகளுக்கெனத் தனித்துவமாக இயங்கும் ஒரே நிறுவனம் யாழ் நகரில்

### பட்டப் படிப்புகள் கல்லூரி
### புதிய கல்வியாண்டு 1995/96

யாழ்ப்பாணம், பேராதனைப் பல்கலைக்கழகங்களின் வெளி நிலைப் பட்டப் பாட நெறிகளான

கலை முதற் தேர்வு - G.A.Q
கலைமாணி பகுதி i - B. A. Part i
கலைமாணி பகுதி ii - B. A. Part ii
வணிக முதற் தேர்வு - First - in Commerce
வணிக மாணி பகுதி i- B. Com Part i
வணிக மாணி பகுதி ii - B. Com Part ii



நாட்டுப் பற்றாளர்

## விஜயரத்தினம் தேவகுமார்

(அறிவாளி)

(யாழ்/ சென்ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவன்)

அளிப்பு 27-11-1970 — அழிப்பு 30-12-1989

என்ன தவம் செய்தோம் உன்னை பிள்ளையாக - பெற
என்ன பாவம் செய்தோம் உன்னை பறிகொடுக்க
என்ன துரோகம் செய்தாய் உன்னை துரோகிகள் - அழிக்க
உன்னை தியாகம் செய்தாய் தமிழ் ஈழத் தாகம் தீர.

71/9, தேவகுமார் வீதி,
அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

நித்தம் உன் நினைவில்
பெற்றோர், சகோதரிகள்

(10504)



# தமிழீழ காவல்துறை

# பதவி வெற்றிடங்கள்

### 1. எழுதுவினைஞர்கள்

கல்வித் தகைமை :- க. பொ. த (உயர் தரம்) சித்தி அல்லது க. பொ. த (சாதாரண தரம்) தமிழ்மொழி, கணிதம்/எண்கணிதம் உட்பட ஐந்து திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வயது :- 20 தொடக்கம் 30 வரை

மேற்படி தகைமையுடைய ஆண்/பெண் இருபாலாரும் 02-01-1995 தொடக்கம் 06-01-1995 வரை பழைய பூங்காவிலுள்ள தமிழீழ காவல்துறை அலுவலகத்திற்கு நேரில் எழுத்து மூல விண்ணப்பத்துடன் உரிய சான்றிதழ்களுடனும் சமுகம் தரவும்.

### 2. சாரதிகள் (வாகனம் செலுத்துபவர்)/மெக்கானிக்-இலேசான, பாரமான வாகனங்கள்.

கல்வித் தகைமை :- 08-ம் வகுப்புக்கு மேல்.
வயது :- 25 தொடக்கம் 40 வரை.
உயரம் :- 5' 6''

அனுபவமுள்ளவர்கள் சான்றிதழ்களுடனும் வாகனம் செலுத்தும் அத்தாட்சிப் பத்திரங்களுடனும் 02-01-95 தொடக்கம் 06-01-95 வரை பழைய பூங்காவிலுள்ள தமிழீழ காவல்துறை அலுவலகத்திற்கு நேரில் சமுகம் தரவும்.

### 3. சமையலாளர்கள்

தகைமைகள் :- சமையல் தொழிலில் குறைந்தது மூன்று வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
வயது :- 30ற்கு மேல்.

மேற்படி தகைமையுடைய ஆண் சமையலாளர்கள் பழைய பூங்காவிலுள்ள தமிழீழ காவல்துறை அலுவலகத்திற்கு 02-01-95 தொடக்கம் 06-01-95 வரை நேரில் சமுகம் தரவும்.

நன்றி

''புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்''

பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை.

(சி-11033)

வணிக முதற் தேர்வு - **First - in Commerce**
வணிக மாணி பகுதி **i- B. Com Part i**
வணிக மாணி பகுதி **ii - B. Com Part ii**
வணிக மாணி பகுதி **iii - B. Com Part iii**
விஞ்ஞான முதற் தேர்வு - **G. S.Q** (புள்ளி விபரவியல்)
விஞ்ஞான மாணி - **B. Sc**

க. பொ. த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

**விரிவுரைகள் 7-1-1995-ல் ஆரம்பமாகின்றன**

உதவிப் பதிவாளர்,
பட்டப் படிப்புகள் கல்லூரி,
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-11040)

# பாராட்டுகின்றோம்



யாழ். வேம்படி மகளிர் கல்லூரி பழையமாணவியும், கொழும்பு இந்து மகளிர் கல்லூரி மாணவியுமான **செல்வி.சதாபானு** தர்மலிங்கம் கடந்த 94 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த உயர் தரப் பரீட்சையில் உயிரியல் துறையில் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்திகளைப் (4A) பெற்று சித்தியடைந்துள்ளமையை பாராட்டுகின்றோம்

நண்பிகள்

(10536)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.



# சந்திரிகா அரசை தனது பொறிக்குள் சிக்கவைத்து விட்ட இராணுவம்

இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வு குறித்து பலமான சந்தேகங்களும், கேள்விகளும் எழத்தொடங்கியுள்ளன. இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் திட்டமிட்டவாறு நடைபெறாமல் முன்னுக்குப் பின் முரணானசெய்திகள் வெளியாகிக்கொண்டிருப்பதே இச்சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்குமான காரணமாகும்.

சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கமானது பதவி ஏற்றகாலத்தில் (19-08-94) இல் இருந்து இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் அரசியற் தீர்வு காண்பதே தமது நிலைப்பாடு எனக் கூறிக் கொண்டாலும்' சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கம் ஜனாதிபதிப்பதவியை கைப்பற்றுவதற்கு முன்பிருந்த அரசியல் நிலைப்பாட்டிற்கும், ஜனாதிபதிப் பதவியை ஏற்ற பின்னர் தற்பொழுதுள்ள அரசியல் நிலைப்பாட்டிற்கும் இடையில் சில வேறுபாடுகள் தெரிகின்றன.

பிரதம மந்திரியாக சந்திரிகா குமாரதுங்கா இருந்த காலத்தில் (19-08-94- 12-12-94) இனப் பிரச்சினை குறித்த அவரது அறிவிப்புக்கள் எந்த வித அழுத்தத்திற்கும் உட்படாததாக இருந்தன. இதற்கு அதிகாரமற்ற பிரதமர் பதவி, ஜனாதிபதி பதவியைக் கைப்பற்றுவதற்கான தேர்தல் வாக்குறுதி என்பன இதற்கு அடிப்படையாக இருந்திருக்கலாம்.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும், பொதுஜன ஐக்கிய முன்னணியினரும், குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரும் இனப்பிரச்சினைக்கு விடுதலைப்புலிகளுடன் பேசி அரசியற் தீர்வு காணப்படும் என தேர்தல் பிரசாரத்தில் தாம் முன்வைத்தமை துணிகரமானதொரு செயல் என இன்று கூற முற்படுகின்றனர். ஆனால், இது அரசியல் யதார்த்தத்தை திரிபுபடுத்துவதற்கானதொரு விளக்கமே ஆகும்.

பத்து வருட காலமாகத் தொடர்ச்சியாக நடந்து வரும் போரினால் சலிப்படைந்து போய்விட்ட சிங்கள மக்களும், பத்து வருடப் போரில் வெற்றி காண முடியாது போய்விட்ட இராணுவமும், யுத்தத்தை நியாயப்படுத்த சிங்களப் பேரினவாதிகளாலும் மற்றும் பேரினவாத பத்திரிகைகளாலும் முடியாது போய்விட்ட அவல நிலையுமே சந்திரிகா குமாரதுங்கா சமாதானம் பற்றி வலியுறுத்தியபோது அவருக்கு பெருவெற்றிக்கு வழிவகுத்தன.

இதேவேளை, சந்திரிகாவும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் எடுத்த எடுப்பில் இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு எதையும் முன்வைக்கவில்லை. முதலில் தெற்கில் ஐந்து மாகாணங்களுக்கு நடந்த பொதுத்தேர்தலில் பரீட்சித்துப்பார்த்து பின்னர் பொதுத்தேர்தலில் பரீட்சித்து, அதன்பின்பே ஜனாதிபதித்தேர்தலில் சமாதான முறையிலான அரசியல் தீர்வு பற்றிப்பேசினர்.

இவ்வாறான பரீட்சிப்பிற்கு பின்னரும் இறுதி நேரத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்தமையானது, சந்திரிகா குமாரதுங்கா சமாதானத்தின் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையைச் சந்தித்ததே காரணமாகும்.

ஆனால், மக்கள் இதில் குழப்பம் ஏதும் அற்று இருந்தனர். இது சமாதானத்தின் தேவையை சந்திரிகா குமாரதுங்கா கூறியதைவிட சிங்கள மக்கள் உணர்ந்திருந்ததையே காட்டியது.

அத்தோடு, பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்குப் பின்னர்- ஜனாதிபதித் தேர்தலுக்கு இடையில் அரசாங்கம் மேற்கொண்ட சமாதான முயற்சிகள் சந்திரிகாவின் மீதான நம்பிக்கையை சிங்கள மக்

தலைமையின்யுத்தம் குறித்த விடாப்பிடியான நிலையையும், பௌத்த பேரினவாதிகளின் இனவெறிக் கூச்சலையும் சந்திரிகா குமாரதுங்கா சாடியபோதும் மக்கள் அதை நியாயமானதென ஏற்றுக் கொண்டனர். இதனைக் காமினி திசாநாயக்காவின் கொலை கூடப்பாதிப்படையச் செய்யவில்லை,

இதற்கு ஏற்றால் போன்றே சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கமும் முதலாம் கட்டப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தபோது ''ஓரளவு திறந்த மனத்துடன்'' இருப்பதாகவே தென்பட்டது விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த யாழ். வந்த அரசாங்கத் தரப்புக் குழுவிற்கு தலைமை தாங்கிய பலபத்தபெண்டி ' தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதில் ஆவலாக இருக்கின்றது'' எனத் தெரிவித்தார்.

இதனை உறுதிப்படுத்துமாப் போன்றே முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையும் அமைந்திருந்தது. இதில் தமிழ்மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகளுக்கும், அவற்றிற்கான தீர்வுகளுக்கும்முதன்மை அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், சமாதானம் பற்றியும், புலிகளுடன் பேசுவது குறித்தும் அறிவிப்பொன்றை வெளியிடுவதற்கு எவருக்கும் துணிவு தேவையானதாக இருக்கவில்லை. பெரும்பான்மை மக்களின் உணர்வைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் மட்டுமே இருந்திருந்தால் போதுமானதாகும்.

ஆனால், முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையின் பின்னர் அரசியற் சூழ்நிலைபடிப்படியாக மாறிவந்தது. அரசாங்கம் ''திறந்த மனத்துடன் பேசுவதை'' தவிர்த்த அதேவேளை, சமாதான முயற்சிகளை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் எதையும் மேற்கொள்ளவும் இல்லை.

முதலாம் கட்டப் பேச்சு வார்த்தைகள் முடிவுற்றதைத் தொடர்ந்து அரசாங்கம் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் பற்றிப் பேசினாலும், முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையில் ஆராயப்பட்ட விடயங்கள் எதிலுமே உருப்படியான நடவடிக்கை எதையும் அரசாங்கம் எடுக்கவில்லை. சந்திரிகா குமாரதுங்கா பிரதமராக இருந்தபோது பொருளாதாரத் தடையில் செய்த சிறுதளர்வு போன்று தானும் ஜனாதிபதியான போதும் அவர் செய்யவில்லை. இதில் பொருளாதாரத் தடைத்தளர்வை அமுல்படுத்த இராணுவம் தடையாக இருப்பதுவேறுவிடயம்.

இதற்கு மேலாக, ஜனாதிபதியாகச் சந்திரிகா குமாரதுங்கா பதவியேற்ற போது, நல்லெண்ண நோக்கில் ஒருவாரகால தாக்குதல் நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் செய்தபோதும் அரசாங்கம் அது குறித்து மௌனமே கடைப்பிடித்தது.

இவ்வாறு அரசாங்கத்தின் நிலைப்பாடு ஜனாதிபதித் தேர்தலின் பின் மாற்றம் அடைவதற்கு, இராணுவத்துடன் அரசாங்கம் செய்து கொண்ட சமரசமே காரணமாகும். அதாவது இனப்பிரச்சினை தொடர்பாக இராணுவம் கொண்டுள்ள நிலைப்பாட்டிற்கு ஏற்ப தனது கொள்கையில் அரசாங்கம் இசைவாக்

நிலைகளில் இருந்து ஒரு அங்குலம் தானும் பின்வாங்குவதில்லை'' என்பது. அடுத்தது, 'பூநகரிப் பிரதேசத்தில் இருந்து பாதை திறப்பதற்காக விலகிச் செல்வதில்லை'' என்பதாகும்.

இன்று இவ்விரு நிபந்தனைகளும் அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டவையாகவே கருத இடமுண்டு. அதாவது முன்னர் போல் இராணுவத்தினரின் நிலைப்பாட்டை ஜனாதிபதி சந்திரிகா விமர்சனரீதியாக நோக்கும் நிலையில் இன்று இல்லை.

இந் நிலையில் முதலாம் கட்டப்பேச்சுக்களில் அரசாங்கம் ஆராய்வதாக ஒப்புக் கொண்ட விடயங்கள் கேள்விக்குரியதாக்கப்பட்டுள்ளன. போக்குவரத்துப்பாதை திறப்பு விவகாரம், அத்தியாவசியப்பொருட்களுக்கான விலை குறைப்பு முயற்சி, புனர்வாழ்வு, பொருளாதாரப் புனர்நிர்மாணம் போன்றவை அரசால் ஊக்கம்அளிக்கப்படாதவிடயங்களாக இருந்தன.

இவ்வாறாக அரசாங்கத்தின் நிலை மாறியதற்கான சமிக்கைகள் நிறையவே உள்ளன. இதில் பாதை திறப்பு விவகாரத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாடானது சிறப்பான உதாரணமாகக் காட்டக் கூடியது. முதலாம் கட்டப்பேச்சுக்களின் போது பூநகரிப் பாதை விவகாரத்தை பரிசீலிப்பதாகக் கூறிய அரசாங்கத்தரப்பு இன்று ஆனையிறவுப் பாதை குறித்துப் பேசுவது இதன் வெளிப்பாடே ஆகும்.

யாழ் குடாநாட்டிற்கான தரை வழிப்பாதையாக ஆனையிறவுப் பாதையே திறக்க முடியும் என்பது இராணுவத்தின் நீண்டகால முடிவாகும். ஐ. தே. கட்சி ஆட்சிக் காலத்திலும் அதனையே இராணுவம் கூறியது. அதுவே பாதை திறப்பது தொடர்பான முடிவு எதையும் கடந்த காலத்திலும், எடுப்பதற்கு வாய்ப்பில்லாது செய்திருந்தது. இந்நிலையில் புதிய அரசாங்கமும் அதனையே திருப்பிக் கூறுவது என்பது அரசாங்கம் இராணுவத்தின் நிலைப்பாட்டிற்கு ஏற்ப வழி மாறிச்செல்வதையே உணர்த்துகின்றது.

இவ்வாறாக அரசாங்கத்தின் மாறிய நிலைப்பாடாகவே கடந்த 20 ஆம் திகதி விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் அனுப்பி வைத்த கடிதம் இருந்ததெனலாம். இக்கடிதம், முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையில் அரசாங்கம் ஒப்புக்கொண்ட பலவற்றை மறுதலிப்பதாக இருந்தது. தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு முதற்கட்டப் பேச்சுகளின் போது வழங்கப்பட்ட முக்கியத்துவம், வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இதில் சுட்டிக்காட்டப் படவில்லை.

இக்கடிதமானது பேச்சுவார்த்தையில் அரசாங்கம் தோற்றுவித்த முட்டுக் கட்டையாக எழுந்தது. இந்நிலையில், தலைவர் பிரபாகரனினால் முதற்கட்டப் பேச்சுவார்த்தையில் அரசாங்கத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட விடயங்கள் ஞாபகப்படுத்தப்பட்டன கடிதம் கிடைத்து இருதினங்களில் அரசாங்கத்திற்குத் தலைவர் பிரபாகரன் எழுதிய கடிதத்தில், முதற் கட்டப் பேச்சுக்களின் தொடராக தமிழ் மக்களின் அன்றாட அத்தியாவசியமான பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனவும், பேச்சுவார்த்தைகள் கட்டம் கட்டமாக நடத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார். அத்தோடு போர் நிறுத்தத்திற்கும், சமாதானப் பேச்சிற்கும்

இதில், பாதை திறப்பு, பொருளாதாரத் தடை நீக்கம், கடற்தடைச்சட்டம் நீக்கம், யுத்த நிறுத்தம் எனப் பல அம்சங்கள் இருந்தன. ஆனால் இராணுவம் வெற்றிகரமாகச் செயற்பட்டு ஒரு சில விடயத்தில் மாத்திரம், அதுவும் தனக்குச் சாதகமான விடயத்தில் மட்டும் விட்டுக் கொடுப்புச் செய்து ஏனையவற்றை அரசாங்கத்திடம் 'பொறித்து' விட்டது என்றே கொள்ளமுடியும்.

இந்த வகையில் பார்க்கும் போது இராணுவம் அரசாங்கத்தை தனது வழிக்குத் திருப்பியுள்ளது என்பதை விட சந்திரிகா அரசாங்கத்தைப் பெரும் நெருக்கடிக்குள்இராணுவம் தள்ளியுள்ளது என்றும்கூறலாம். அதாவது தன் முன் எழுந்த பிரச்சினையை சந்திரிகா அரசாங்கத்தின் தலையில் இராணுவம் சுமத்தியுள்ளதெனலாம்.

இது ஒரு வகையில் யுத்தத்தை நோக்கி அரசாங்கத்தை கொண்டு செல்வதான அம்சமாகவும் இருந்தது. எவ்வாறெனில், இனப்பிரச்சினைக்கான அடிப்படைத் தீர்வு ஒன்றை அரசாங்கம் இன்று உடனடியாக வைக்கும் நிலையில் இருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறு வைப்பினும், தமிழ் மக்கள் தரப்பில் இருந்தோ அன்றி சிங்கள மக்கள் தரப்பில் இருந்தோ அது ஆட்சேபனைக்குரியதாகவே இருக்கும்.

இந்நிலையில், அரசாங்கம் உருப்படியான தீர்வுத் திட்டத்தை வழங்க முன்வராவிடில் தமிழர் தரப்பு ஆட்சேபத்தையோ, அன்றி தமிழர் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுத் திட்டத்தை முன்வைப்பின் தென்னிலங்கையில் சிங்கள - பௌத்த பேரினவாதிகளால் எழும் நெருக்கடிகளை முன்வைத்தோ இராணுவம் தனது நிலைப்பாட்டையும் விருப்பத்தையும் நிறைவேற்றிக்கொள்ள முடியும். அதாவது போரைத் தொடர்ந்து நடத்தமுடியும்.

இந்தவகையில், சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கத்திற்கு சமாதானத்திற்கான ஒருகால அவகாசம் வழங்காது தனதுநிலைப்பாட்டை இராணுவம் உறுதி செய்து கொண்டுள்ளதெனலாம். இது இராணுவத்தைப் பொறுத்து பெரும் வெற்றியே ஆகும். அத்தோடு ''போர்நிறுத்தம்'' தொடர்பாக இராணுவம் அரசின் நிலைப்பாட்டிற்கு உடன்படுவது போன்று காட்டிக் கொண்டிருப்பினும், அதன் கோரிக்கைகள் சில போர் நிறுத்தத்திற்கு நிபந்தனைகள் விதிப்பதுபோன்றே உள்ளது.

இவ்வகையில், சந்திரிகா அரசாங்கத்தை, மக்கள், அளித்த தீர்ப்பிற்கு எதிரான வழியில் இராணுவம் திருப்பியுள்ளது எனலாம். சந்திரிகா அரசாங்கமும் அதனை விளங்கியோ அன்றி விளங்காமலோ ஏற்றுக் கொண்டுள்ளது. இது சந்திரிகா அரசாங்கத்தில் பொதுவாகக் காணப்படும் தடுமாற்றத்தினதும் முன்னுக்குப் பின் முரண்பாடான செயற்பாட்டின் அடிப்படையிலானதாகவும் இருக்கலாம்.

ஆனால் காரணம் எதுவாக இருப்பினும் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் நடைபெறாமைக்கும், அதன் எதிர்காலம் குறித்து சந்தேகங்கள் எழுந்துள்ளமைக்கும் முதலாம் கட்டப் பேச்சுக்களின் பின் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டமையே காரணமாகும். அதாவது முதலாம் கட்டப் பேச்சுக்களின் பின் புதிய அரசியற்தளத்தில்

அரசாங்கம் மேற்கொண்ட சமாதான முயற்சிகள் சந்திரிகாவின் மீதான நம்பிக்கையை சிங்கள மக்களுக்கு ஊட்டியது. பேச்சுவார்த்தையின் மூலம் பொ. ஐ. முன்னணி அரசாங்கம் ஒரு தீர்வை எட்டும் என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தியது.

இதன் காரணமாக, முன்னைய ஐ. தே. க. அரசாங்கம் நடத்திய யுத்தத்தையும், இராணுவத்

ஏற்ப தனது கொள்கையில் அரசாங்கம் இசைவாக்கம் செய்து கொண்டது எனலாம்.

இராணுவத்தரப்பு இருவிடயங்கள் விட்டுக் கொடுப்பிற்கு இடமில்லாதவை என்று வலியுறுத்திவிட்டது. இதில், முதன்மையானது ''தற்பொழுது இராணுவம் நிலை கொண்டுள்ள

போர் நிறுத்தத்திற்கும், சமாதானப் பேச்சிற்கும் புலிகள் எந்த வேளையிலும் தயாராக இருப்பதையும் உறுதி செய்திருந்தார்.

முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையின்படி அரசாங்கம் பல்வேறு கருமங்களை ஆற்ற வேண்டியிருந்தது. ஆனால் அவையாவும் இராணுவத்துடன் நேரடித் தொடர்புபட்டவையாகவே இருந்தன.

நின்று அரசாங்கம் பேச முனைந்ததன் விளைவே இதற்குக் காரணமாகும். ஆகையினால், இனி சமாதானப் பேச்சுவார்த்தை என்பது அரசாங்கம் தனது நிலையை மறு பரிசீலனை செய்வதிலேயே தங்கியுள்ளது.

-ஜெயராஜ்

## கவிதைகள்

பல மடங்கு அதிகரித்துள்ளன.

தவிர, இந்த மண்ணில் நிகழும் அற்புதமிக்க விடுதலைக்கான போராட்ட நிகழ்வுகள் துப்பாக்கிகளுடனும், பேனாக்களுடனும் எமது இளைஞர்-யுவதிகளை நிற்க வைத்துள்ளன. அப்படியிருந்தும் இங்கு இருந்து வெளிவரும் இதழ்களின் தொகை பெருகியுள்ளது என்று சொல்வதற்கில்லை. பலர் தனித்தனி தொகுப்புகளை வெளியிடுகின்றனர். பல சஞ்சிகைகள் கவிதைகளுக்கென பல பக்கங்களை ஒதுக்குகின்றன.

'கவிதை' என்ற சஞ்சிகை முற்றிலும் கவிதைக்கென சமீப காலமாக வெளிவருகின்றது.

தமிழ்த்தாய் வெளியீட்டகம் பல கவிஞர்களின் படைப்புகளை திரட்டி தொகுத்து வெளியிட்டு வருகின்றது. வெளிச்சம் சஞ்சிகை கவிதைக்கென சிறப்பு இதழை சமீபத்தில் வெளியிட்டுள்ளது. இவ்வாறு முன்னெப்போதும் இல்லாத தீவிரமாக கவிதைப் படையல் உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

'நோக்கும்' சரி, 'கவிஞனும்' சரி பிற மொழிக் கவிஞர்களின் கவிதைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்ததற்கான காரணம்-அக்கவிதைகள் சொல்லும் புதிய செய்திகளுக்காகவே ஆனால் இன்று பிறமொழி-பிறநாட்டார் எமது கவிதைகளை மொழி பெயர்ப்பு செய்து வெளியிட வேண்டிய நிலையில் உள்ளனர்.

அந்தளவிற்கு உன்னதங்களின் இருப்பிடமாக எமது தமிழீழம் அமைந்து விட்டது.

'ரவைக் கூட்டுச் சிறையி
லிருந்து
ரவைகள் துடித்திருக்கும்!
என் மனதிருந்து
வெளிவரத் தவிக்கும் கவி
தைகளாய்...

உணவெனும் உயிர்காப்பி
கூட - என்
தொண்டை வாயிலைக்
கடக்க அந்தரப்படும்
என் காவலிருப்பில்
கால், கைகள் களைத்தா
லும்
உள்ளம் விதி விலக்கு!
சூரியன் எப்போது வருமோ
அது வரை
இந்த நிலை எனக்கிருக்
கும்!'

-இது- கவிதைஇதழில்சமீபத்தில் 'இரவுவேளையில்'...! என்ற மகுடத்தின் கீழ் இளந்திரையன் என்பவர் எழுதிய கவிதை சொற்சிக்கனத்துடன்... புதிய வீச்சுடன் எமது போராட்ட நிகழ்வு சொல்லப்பட்ட கவிதை இது.

சீன, ஸ்பானிய, பிரான்சிய, ஆங்கிலமொழிக் கவிதைகளை தமிழ்ப்படுத்தி தமிழ் ஏடுகளை நிரப்பித்தள்ள வேண்டிய தேவை குறைந்து விட்டது என்று செல்லலாம். காரணம் தமிழீழக் கவிதை எங்கேயோ சென்றுவிட்டது. உச்சத்தில் நின்று உலகத்தை நோக்குகின்றது.

'சிலுமின' என்கிற சிங்களப் பத்திரிகை ''யாழ்ப்பாணத்துக் கவிதைகள்'' என்ற தலைப்பில் பதினொரு தமிழ்க் கவிதைகளை சிங்களத்தில் மொழிபெயர்த்து பிரசுரித்துள்ளதும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

கவிதை'ப்படைப்பாளிகள் அதிகரித்துள்ளனர், வாசகர்களும் அதிகரித்துள்ளனர். ஆகவே கவிதைக்கான களங்களும் அதிகரிக்க வேண்டிய கால நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளமை மகிழ்ச்சி தரும் விஷயம் என்றே கொள்ளலாம்.

# பேச்சுக்களில் முன்னைய ஆர்வம் இப்போது அரசிடம் இல்லை

## நவசமசமாஜ கட்சிபொதுச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஆரம்பத்தில் காட்டிய ஆர்வத்தை இப்போது காணமுடியவில்லை என நவசம சமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

சந்திரிகா அரசாங்கம் பதவிக்கு வந்த குறுகிய காலத்தில் மக்கள் அதன் மீதான நம்பிக்கையை இழக்கும் நிலை உருவாகி வருகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அப்போது அவர் மேலும் தெரிவிக்கும் போது கட்சியிலிருந்து வாசுதேவ நாணயக்கார பிரிந்து சென்றிருப்பதால் கட்சி பலமிழந்து விடவில்லை.

தற்போது எமது கட்சியுடன் ஜேவிபியினரும் உடன்பட்டு இணையும் நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களிடம் காணப்படுகின்ற | இனவாதச் சாயம் நீக்கப்பட்டதும் தொழிலாளர் நலன்களுக்காக குரல் கொடுக்கும் சக்தியாக எம்மோடு இணையும் நிலை ஏற்பட்டுள்ளது.'

குறுகிய காலத்தில் நாம் அரசாங்கத்திற்கு பிரதான சவாலாக அமையப் போகிறோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாப்பரசர் வருகை குறித்து முத்திரை வெளியிட முடிவு

(யாழ்ப்பாணம்)

பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு இலங்கை அரசு முத்திரை ஒன்றை வெளியிடவுள்ளது.

இம்முத்திரை சமகாலத்தில் யாழ்ப்பாணத்திலும் வெளியிடப்பட வேண்டும் என யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் வடபிராந்திய அஞ்சல் அதிபர் நாயகம், யாழ் பிரதம தபால் அதிபர் ஆகியோரிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

வரும் தை மாதம் 20 ஆம் திகதி பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் இலங்கைவரவுள்ளார்.

இலங்கைவரும் இவர் வண. யோசவ்வாஸ்முனிவரிற்குமுத்திப்பேறுபெற்ற பட்டம் சூட்டுவார். (இ) (நி) (பா)

## விரைவில் பொறுப்பேற்பர்

வடக்குகிழக்கில் புதாக நியமிக்கப்பட்டுள்ள இராணுவ உயரதிகாரிகள் மிக விரைவில் தங்கள் பதவிகளை பொறுப்பேற்பார்கள் என கொழும்பு தினசரி ஒன்று தெரிவித்துள்ளது

# மாலைதீவு ஜனாதிபதியுடன் சந்திரிகா சந்திப்பு

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று முன்தினம் மாலைதீவு ஜனாதிபதி அப்துல்கயூமை சந்தித்து பேச்சுக்களை நடத்தினார்.

இருதரப்பு உறவுபற்றி இப்பேச்சுக்களில் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 55 வயதை பூர்த்திசெய்த ஊழியர் விபரம் சேகரிப்பு

(கொழும்பு)

அரச, கூட்டுத்தாபன சேவையில் 1994 டிசம்பர் 31 ஆம் திகதியன்று 55 வயதை பூர்த்தி செய்துள்ள 'ஊழியர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, ஏற்கனவே ஓய்வு பெற்ற ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு சேர்க்கப்பட்டிருந்தால் அவர்களின்சேவையும் நாளையுடன் பூர்த்தியாவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஒழுங்கீனம் விசாரிக்க குழு

(கொழும்பு)

1977 ஜூலை தொடக்கம் 1994 ஆகஸ்ட் மாதம் வரையிலான காலப்பகுதியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற ஒழுங்கீனங்கள் பற்றி விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க இரண்டுபேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக் காலப்பகுதியில் இடம்பெற்ற நியமனங்கள், பதவி உயர்வுகள், அநீதிகள், இடமாற்றங்கள் உட்பட பலவற்றையும் இக் குழு விசாரணை செய்யும்.

கேள்விப் பத்திரங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டது உட்பட வேறு விடயங்கள் பற்றியும் ஆராயப்படவுள்ளது.

இவ் இருநபர் குழுவுக்கு சட்டத்தரணி எஸ். ஏ. பிறேமரட்ண, எம். டபிள்யூ. பிறேமவர்த்தன ஆகியோரை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா நியமித்துள்ளார்.

இவர்கள் அடுத்த பெப்ரவரிக்கு முன்னர் அறிக்கையை சமர்ப்பிக்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குண்டுவெடிப்பில் பலர் காயம்

(கொழும்பு)

கடந்த ஞாயிறன்று கொழும்பில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில் பலர் காயமடைந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன

மாதம்பை பகுதியில் இச்சம்பவம்நடைபெற்றதாகதெரிய வருகின்றது.

# நிர்வாக சேவைப் பரீட்சை திகதி அறிவிக்கப்படவில்லை

இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பரீட்சைக்கான திகதி இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லையென பரீட்சை ஆணையாளர் யாழ். அரச அதிபருக்கு அறிவித்துள்ளார்.

முன்னதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தவறுதலாக இப்பரீட்சை இம்மாதம் 30 ஆம் திகதி நடைபெறும் என அறிவித்திருந்தது. இதுகுறித்து யாழ். அரசாங்க அதிபர் பரீட்சை ஆணையாளருடன் தொடர்பு கொண்டபோதே அவர் மேற்படி தகவலை வெளியிட்டுள்ளார்.

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது

மகாத்மா நெல்லியடி

தெய்வேந்திரா சாவகச்சேரி

ஆகிய திரை அரங்குகளின்
அகன்ற திரையில்

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுக் கழகம் வழங்கும்

கே. ஏ. அன்ரனியின்

"எல்லைக்கற்கள்"

(வர்ண முழு நீளப் படம்)

தினசரி 6. 30
சனி, ஞாயிறு - 10. 30, 2. 30, 6. 30

(சி-10858)



பாப்பரசரைத் தரிசிக்க கொழும்பு செல்ல இருப்பவர்களுக்கான அறிவித்தல்

பரிசுத்த பாப்பரசரைத் தரிசிக்க எதிர்வரும் ஜனவரி 18-ம் திகதியில் கொழும்பு செல்ல உத்தேசித்து இருப்பவர்களில் இதுவரை தமது பெயர்களையும் அடையாள அட்டை இலக்கத்தையும் தத்தமது பங்குத் தந்தையர்களிடம் பதிவுசெய்து கொள்ளாதவர்கள் உடனடியாகப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ். ஆயரின் செயலர்
அருட்திரு து. தவறாஜசிங்கம்

(சி-11048)



New Science Academy
எழிலகம முன்பாக - யாழ்ப்பாணம்.

94 A/L பரீட்சைக்கு
தோற்றியவர்களுக்கான மீட்டல் (Sat,Sun)

PHYSICS - திரு. சோதிலிங்கம்
பிரிவு- I 9.00 மணி
பிரிவு- II 4.00 மணி

ZOOLOGY - திரு. தம்பிராஜா
8.00 மணி

PHYSICS - திரு. கணேசன்


# அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளை ஐ. தே. கட்சி நினைவுபடுத்தும்

## எதிர்க்கட்சித்தலைவர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கோ பொதுஜன ஐக்கிய முன்னணி மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் குழப்பம் விளைவிக்கவோ ஐக்கிய தேசிய கட்சி எத்தனிக்க மாட்டாது இவ்வாறு அதன் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான கால அட்டவணை என்ற கேள்விக்கு இடமில்லை எவ்வாறாயினும் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் பற்றி அரசாங்கத்துக்கு ஐ. தே. க. அவ்வப்போது நினைவு படுத்தும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாவும் - பாடசாலையை விட்டு வெளியேறியோருக்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபாவும் எப்போது வழங்கப்படும் என்பதை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும்.

அண்மைய காலவேலை நிறுத்தங்களில் - ஐ. தே. க. சம்பந்தப்படவில்லை. தொழிற்சங்க நடவடிக்கைகளில் வன்முறைகள் நடைபெறுவதைகண்டிப்பதாகவும்ரணில் விக்கிரமகிங்க மேலும் தெரிவித்தார்.

# தொழிலற்ற இளைஞருக்கு 1500 ரூபா கொடுப்பனவு

## வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்படுமாம்

வரவு செலவுத் திட்டத்தோடு - தொழிலற்ற இளைஞர், யுவதிகளுக்கு 1500 ரூபாவும், ஜனசவியவுக்கு மேலதிகமாக 2000 ரூபாவும் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக தபால், தந்தி, தொலை தொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்ற அரசு தயாராகவே இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# காணாமல் போனோர் பற்றி விசாரிக்கும் குழு உறுப்பினர் விபரம் அறிவிப்பு

(கொழும்பு)

1988 ஜனவரி மாதம் முதல் வடக்கு -கிழக்கில் காணாமல் போனவர்கள் பற்றி ஆராய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நியமித்துள்ள குழுவுக்கு ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்றத்தலைவர்கே. பாலகிட்ணர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இக் குழுவில் ஓய்வு பெற்ற நீதிமன்ற நீதிபதி வோல்டர் வைத்தியரட்ண, கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி டபிள்யூ. வில்சன்ஆகியோரும் இடம்பெறுகின்றனர்.

ஏனைய இரண்டு விசாரணைக் குழுக்களில் மேல் மாகாணம், தென்மாகாணம், சப்ரகமுவ மாகாணம் ஆகியவற்றிற்கு திருமதி மனோரி முத்தேட்டுவேகம தலைமையில் பேராசிரியர் அமால் ஜெயவர்த்தன, ஜெயந்த டி அல்மெய்டா குணரத்ன ஆகியோரும்

மத்திய மாகாணம், வடமேல் மாகாணம். வடமத்திய மாகாணம், ஊவா மாகாணம் ஆகியவற்றுக்கு ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி ரி. சுந்தரலிங்கம் தலைமையில் எம்,டி. யேசுரட்ணம், எஸ். மடவெல ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# செச்செனியா என்றும் சுதந்திர நாடாகவே இருக்கும்

## செச்செனிய தலைவர் அறிவிப்பு

செச்செனியா சுதந்திர நாடாகவே என்றும் இருக்கும் அல்லது நாம் அனைவரும் யுத்தத்தில் இறப்போம். பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடிய இறுதி நடவடிக்கையை மொஸ்கோவே மேற்கொள்ள வேண்டும்எனவும்செச்செனிய தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை செச்செனியா தலைநகர் மீது ரஷ்ய இராணுவத்தினர் கடும் தாக்குதலை மேற்கொண்டிருக்கும் போதிலும் செச்செனிய வீரர்களை சரணடையச் செய்யும் முயற்சியில் அவர்கள் வெற்றி காணவில்லை. தலைநகரின் சுற்றுப்புறத்தில் இரு தரப்பினரும் கடுமையாக மோதிக் கொண்டுள்ளனர். நகர்ப்புறத்தில் இருந்த இராணுவ விமான நிலையம் ஒன்றை ரஷ்ய இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

## புலிகள்-அரசு

தகவல் ஏதும் கிடைக்கப் பெறவில்லை.

இதேசமயம் விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் மேற்கொளளவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளே புதுவருடத்தில் அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள முதலாவது

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

## ஒளிவிழா

(வடமராட்சி)

கரவெட்டி இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளை அலுவலகத்தில் இன்று காலை 9.00 மணிக்கு 'ஒளிவிழா' நடைபெறவுள்ளது. (பேர)

# தமிழீழ இளநிலைத்தேர்வு அதிகூடியபுள்ளிபெற்றோர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ஆண்டு 8 மாணவர்களுக்கென நடாத்தப்பட்ட தமிழீழ இளநிலைத் தேர்வு 1994 இல் தமிழ், கணிதம். ஆங்கிலம், வரலாறும் சமூகக்கல்வியும், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் ஒவ்வொன்றிலும் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்களும் பாடசாலையும், பெற்ற புள்ளிகளும் வருமாறு:

| பெயர் | புள்ளிகள் |
|---|---|
| **தமிழ்மொழி** | |
| புவனேந்திரன் ஈழநாதன், உடுப்பிட்டி அ. மி. கல்லூரி | 98 |
| ஜனனி தில்லைநாதன், வேம்படி மகளிர் கல்லூரி | 97 |
| சயந்தி குகதாசன், வேம்படி மகளிர் கல்லூரி | 97 |
| தில்லையம்பலம் நிசாந்தன், ஹாட்லிக் கல்லூரி | 96 |
| கிரிஜா மகேந்திரன், யாழ்ப்பாணக்கல்லூரி | 96 |
| ரங்கநாதன் ஜெயப்பிரசன்னா, ஹாட்லிக் கல்லூரி | 95 |
| **கணிதம்** | |
| அரியநாயகம் துஷ்யந்தன், உடுப்பிட்டி அ. மி. கல்லூரி | 100 |
| சிவகுமாரன் கிருஷ்ணகுமார், யாழ். இந்துக் கல்லூரி | 99 |
| சிவகலா சிவசுப்பிரமணியம், மெதடிஸ்த. மி. பெ. உ. பா. | 99 |
| சிவதி சிவலிங்கராசா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | 98 |
| பிறேமளா செல்வராசா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | 98 |
| **ஆங்கிலம்** | |
| விநாயகமூர்த்தி துஷ்யந்தன், யாழ். இந்துக் கல்லூரி | 100 |
| அருமைநாயகம் டினேஸ் பெனேசார், பரியோவான் கல்லூரி | 99 |
| மகேஸ்வரன் நிற்றகுலன், பரியோவான் கல்லூரி | 99 |
| ரத்தினம் ரஜீவன், பரியோவான் கல்லூரி | 99 |
| மகேந்திரநாதன் சுபேந்திரன், பரியோவான் கல்லூரி | 99 |
| கைலைநாதன் வாகீசன், பரியோவான் கல்லூரி | 99 |
| வைதேகி வேலாயுதம், மெதடிஸ்த. மி. பெ. உ. பா. | 98 |
| இராஜசிங்கம் பிரசாந்தன், யாழ்ப்பாணக் கல்லூரி | 98 |
| **வரலாறும் சமூகக்கல்வியும்** | |
| ஜெயரூபா தனபாலசிங்கம், வேம்படி மகளிர் கல்லூரி | 100 |
| ஜேசுதாசன் ஜான்சன், புனித பத்திரிசியார் கல்லூரி | 97 |
| சிவகுமாரன் கிருஷ்ணகுமார், யாழ். இந்துக் கல்லூரி | 96 |
| கணபதிப்பிள்ளை குமணன், ஹாட்லிக் கல்லூரி | 96 |
| தர்மராசா சிறீநிவாசன், ஹாட்லிக் கல்லூரி | 96 |
| சிவபாதசுந்தரம் ஜெயராகன், உடுப்பிட்டி அ. மி. கல்லூரி | 96 |

10.00 மணி

**CHEMISTRY** - திரு. மணியம்
11.00 மணி

**BOTANY** - திரு. குணசீலன்
12.00 மணி

**PU/ APP.** திரு. குணசிங்கம்
**MATHS** Tue, Thu. 4-00 - 6.00 மணி

## ஆரம்பம்: 31-12-1994

(சி-11050)

## 7-வது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
30-11-1961

உதிர்வு:
30-12-1987



## செல்வன் கணேசன் சண்முகம்

(சின்னபாபு)

108, பிறவுண்வீதி,
நீராவியடி
யாழ்ப்பாணம்.
(10408)

அன்புடன் நினைவு கூரும்
பப்பா, அம்மா, அண்ணா,
அண்ணி, மகன், அக்கா,
அத்தான், மருமக்கள்,

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கொள்ளவுள்ள முதலாவது முயற்சியாக இருப்பதாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

### தப்பராவெளி

பட்டதாக சிறிலங்கா படை வட்டாரங்கள் கூறுகின்றன.

இம் முகாம் மீதான தாக்குதலானது சமாதான முயற்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது எனவும் இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார்.

இதேவேளை கிழக்கில் தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை காட்டுவதற்காகவே விடுதலைப் புலிகள் தப்பரா வெளியிலுள்ள இராணுவ முகாமை தாக்கியதாக வெளிநாட்டு செய்தி ஏஜன்சி ஒன்று தெரிவித்துள்ளது.

### 85 கே. வி.

லாம் என யாழ், போதனா வைத்தியசாலையின் நிர்வாக அதிகாரியொருவர் நேற்று மாலை எமது செய்தியாளருக்கு தெரிவித்தார்.

தற்போது யாழ், போதனா வைத்தியசாலை பாரிய மின்சார பிரச்சினையையெதிர் நோக்குவதாகவும் இதனால் பல அத்தியாவசிய தேவைகள் ஸ்தம்பித நிலையடையும் சந்தர்ப்பம் எழுந்துள்ளதாகவும் இதனை தவிர்ப்பதற்கு தற்போது நடவ்டிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை அண்மையில் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் கொழும்பிற்கு செல்ல இருப்பதாகவும் இவர் இதன்போது பாரிய மின்பிறப்பாக்கியொன்றை பெற்றுக் கொள்வதில் தீவிர கவனம் செலுத்த திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்த அந் நிர்வாக அதிகாரி இதன் மூலம் ஓரளவு இப் பிரச்சினையைத் தீர்க்கமுடியும் என நம்பிக்கை தெரிவித்தார், (நி,இ,பா)

### 1994 - 12 - 30

வெள்ளி இரவு

8.01 கலைமஞ்சரி, நிகழ்ச்சியில் முதலில் நூல் அறிமுகம். அறிமுகமாகும், நூல்கள். மெற்றாஸ்மயில் எழுதிய ''ஆணையை அடக்கிய அரியாத்தை'' திருமறைக் கலாமன்றம் வெளியிட்ட ''ஆற்றுகை'' என்னும் காலாண்டு சஞ்சிகையின் முதல் இதழ். அதனையடுத்து சிறுகதை, மலரன்னை எழுதிய ''விறகு'' சிறுகதையைத் தொடர்ந்து கவிதை, ந. கிருஷ்ணா எழுதிய ''திலீபன் தியாகம் திறவு கோலானது'' ஆகியன கலைமஞ்சரியை அலங்கரிக்கும்.

8.25 கணப்பொழுது சி. கண்ணம்மா எழுதிய, ''லெப்ரினன்ட் பவான்''

8.30 செய்திகள்

8.40 அரசியல் அரங்கம்- வே. பாலகுமாரன் எழுதிய, ''10 வருட போபால் நகர மக்களின் பரிதவிப்பு''

8.50 வாத்தியகானங்கள்.

9.00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

### 1994 - 12 - 31

சனி காலை

7.02 மாவீர வணக்கம்.

7.15 நீங்கள் கேட்டவை.

7.30 செய்திகள்,

7.35 பத்திரிகைச் செய்திகள்

7.40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

8.00 மணிக்குகாலை நிகழ்ச்சிகள்யாவும்நிறைவு பெறும்.

9.00 மணிக்கு ஒளிவிழா நடைபெறவுள்ளது. (யோ)

### ஜனவரியில்

வனங்களுக்குரிய பொருள்கள் இக்கப்பலிலேயே ஏற்றிவரப்படும் எனவும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் அறிவிக்கப்படும் கப்பல் கட்டணம் பெறப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்

சீமெந்து, சைக்கிள் போன்ற பொருள்கள் இக்கப்பலில் எடுத்து வருவதற்கு அனுமதிக்கப்படும் என அரச அதிபர் குறிப்பிட்டார். (தி)

### மீனவர்

ரணத்தைத் தொடர்ந்து வழங்குவதற்கு புனர்வாழ்வு அமைச்சு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது, (தி)

### துப்பாக்கிச்சூடு

வில் நடந்துள்ளது. இதன் போது இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கி சூடு படகை துளைத்துக் கொண்டு படகில் இருந்தவரான ஆறுமுகம் லோகேஸ்வரன் (வயது 24) என்பவரை படுகாயப்படுத்தியது.

மேற்படி படுகாயத்திற்கு உள்ளானவர் காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்து வட்டுக்கோட்டை மாவடியில் வசித்து வந்தவராவார்.

### பரு. துறை

டைந்துள்ளன,

இதனால் கப்பலில் பொருள்களை விரைவாக இறக்கி கரை சேர்ப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது இது பற்றி அரச அதிபர் அறிவித்ததை அடுத்து விரைவில் இரண்டு இழுவைப்படகுகளை புதிதாக அனுப்புவதற்கான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக அரச அதிபர் தெரிவித்தார்.

(தி)

சிவபாதசுந்தரம் ஜெயராகினி 96
உடுப்பிட்டி அ. மி. கல்லூரி

குமாரி புஸ்பா இலங்கைநாதன் 96
வேம்படி மகளிர் கல்லூரி

சிவதி சிவலிங்கராசா 96
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

### விஞ்ஞானம்

விநாயகமூர்த்தி துஷ்யந்தன் 97
யாழ். இந்துக் கல்லூரி

தமிழீழ இளநிலைத் தேர்வு 1994 இல் சுண்டிக்குளிமகளிர் கல்லூரியைச் சேர்ந்த இருமாணவிகளும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த இருமாணவர்களும்சகல பாடங்களிலும் மிகுதிறன் தேர்ச்சி (8D) பெற்றுள்ளனர்.

நேற்றைய தினம் வெளியான முடிவில் இவ்விரு பாடசாலைகளிலும் தலா ஒருவரே மிகுதிறன் தேர்ச்சி பெற்றதாக வெளியிடப்பட்டிருந்தது,

### யாழ்.

ளன. இவர்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்யும் விதமாக இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என யாழ். அரச அதிபர் திரு. பொன்னம்பலம் தெரிவித்தார்.

இந்த மாவட்டத்திற்கு மாதம் ஒன்றிற்கு ஒன்பது ஆயிரம் மெற்றிக்தொன் உணவு தேவை என தீர்மானிக்கப்பட்டது.

இதுவரை காலமும் இடம் பெயர்ந்த மக்கள் பெறும் இலவச உலர் உணவு நிவாரணப் பொருள் ஏற்றிவருவதற்கே கப்பல் கட்டணம் அரசாங்கத்தால் பெறப்படவில்லை. அரச அதிபரின் பேச்சுவார்த்தையை அடுத்து தயாரிக்கப்பட்ட புதிய திட்டத்தின்படி, யாழ். மாவட்டத்தில் உள்ள எல்லா மக்களுக்கும் உணவுப் பொருள்கள் கொண்டுவருவதற்கு இலவச அனுமதி வழங்கப்பட்டுள்ளது

இலவச உணவுப் பொருள்கள் ஏற்றிவருவதற்கென இரு கப்பல்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும். இக் கப்பல்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவதைப் பொறுத்து எடுத்துவரப்படும் பொருள்களின் தொகையும் அமையும் என தெரிவிக்கப்பட்டது.

ஜனவரி மாதத்திலிருந்து அமுலாகும் இத்திட்டத்தின் பிரகாரம் யாழ். மாவட்டத்தின் உணவுத் தேவையை பூர்த்தி செய்யும் பொறுப்பை அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுள்ளது என அரச அதிபர் மேலும் குறிப்பிட்டார்.

தேவையாயின் மந்திரி சபையின் ஆலோசனைக்கு இதை கொண்டுவருவதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தயாராகஇருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (தி)

### தனிப்பட்ட

பெறுபேறுகள் பருத்தித்துறைக்கு நேற்றுவந்த 'மாகோ' கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளன.

இப் பரீட்சார்த்திகளின் பரீட்சை முடிவுகள் விசேடதபால்மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை திணைக்களம் முன்னர் அறிவித்திருந்தது தெரிந்ததே. (யோ)